பக்கங்கள்-16 புரட்டாதி 14,2014 விலை-30.00

**விளம்பரங்கள்**

அனைத்துவகையான விளம்பரங்களையும் பிரசுரிக்க நாடுங்கள்...

தினப்புயல் 154, 6ம் ஒழுங்கை, தேக்கவத்தை, வவுனியா.

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

**அன்பான வாசக நெஞ்சங்களே**

எமது தினப்புயல் பத்திரிகை தொடர்பான அனைத்து விமர்சனங்களையும், ஆக்கங்களையும் வரவேற்கின்றோம்.

மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885 Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 98

## அரசாங்கத்தினால் பல்லுப்பிடுங்கிய இரு பாம்புகள்...

## இந்தியா மீண்டும் தமிழினத்திற்கு துரோகம் இழைக்க நேரிட்டால் மோடியை இழக்க நேரிடும்

## போரை முடிவிற்கு கொண்டு வந்த சர்வதேசம் மஹிந்தவை தூக்கிலிட முயற்சி!




**கலையரசி நகை மாடம்**

kalaiyarasi Gold houae

CENUINE 22 GOLD JEWELLERY

கலையரசி நகை மாடம்

කලෛයරසි නගෛ මාඩම්

Jaffna road kilinochchi.
T.p: 077 9228432
077 4357193



விறுவிறுப்புடன்...

**தினப்புயல்**

பேசும் மக்களின் இதய துடிப்பு


www.thinappuyalnews.com

உங்கள் விளம்பர தொடர்பிற்கு:-

Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# அரசாங்கத்தினால் பல்லுப்பிடுங்கிய இரு பாம்புகள்...



அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் விடுதலைப்புலிகளின் போராட்டத்தின் பின்னர் பல அரசியல்வாதிகளை உள்வாங்கிவைத்துள்ளது. அந்த வகையில் வடமாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் மற்றும் முஸ்லீம் காங்கிரசின் தலைவரும் நீதியமைச்சருமாகிய ரவூப் ஹக்கீமும் இதற்குள் உள்ளடக்கப்படுகின்றனர். இவர்கள் பேச்சளவில் மாத்திரம் தமிழ்பேசும் சமுதாயத்தின் மீது அக்கறை காட்டுவது போன்று செயற்படுகின்றார்கள். முஸ்லீம் காங்கிரசைப் பலப்படுத்தி அதனூடாக தீர்வுத்திட்டத்தினை வழங்கும் நோக்கம் இல்லை. அதேபோன்று சமஸ்டி சமஸ்டி எனக்கூறிக்கொள்ளும் விக்னேஸ்வரன் ஐயா அவர்களும்நழுவிப்போகும்அரசியல் தன்மையினையே வளர்த்துவருகின்றார். பல்வேறு காலகட்டங்களில் அரசியல் மாற்றங்களுக்கேற்ப அணுகுமுறைகளை ஏற்படுத்தப்போகின்றோம் என்று கூறிக்கொண்டும், இணக்கப்பாட்டு அரசியல் தற்பொழுது வடமாகாணசபையிலும் இணைந்துள்ளது வேதனைக்குரிய விடயமாகும். இதனையே எதிர்ப்பு அரசியலாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேற்கொண்டுவருகின்றார்.

அந்தவகையில் சிங்கள இனவாதத்தோடு இரண்டறக் கலந்தவர் சி.வி.விக்னேஸ்வரன் என்பதனை அடிக்கடி மக்கள் மத்தியில் தெளிவுபடுத்துகின்றார். அரசாங்கத்தைசாடியும்சாடாமலும்தமிழ்த் தேசியத்தினை உறுதிப்படுத்தாமலும் அவருடைய மேடைப்பேச்சுக்கள் அமையப்பெறுகின்றது. ஒருவிடயத்தினை எவ்வாறு கையாள்வதென்பது ஒரு நீதியரசர் என்கின்ற வகையில் அவருக்கு நன்கு தெரியும். ஆனால் அரசினால் தனக்கு கேடு விளைவிக்கப்படுமோ எனப்பயந்தே அவருடைய செயற்பாடுகள் அமையப்பெற்றுவருகின்றன. சமாதானம், போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற இந்த மூன்று ,ஒப்பந்தங்களிலும் இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கைச்சாத்திட்டுக்கொண்ட இலங்கையரசு அதனை இழுத்தடித்து நான்கு வருடங்களின் பின் யுத்தபூமியாக மாற்றியது.

அதேபோன்று யுத்தம் நிறைவடைந்து 05வருடங்களின் பின் மீண்டுமொரு யுத்தபூமியை உருவாக்குவதே அரசின் குறிக்கோளாகும். சமஸ்டி ஆட்சி அல்லது 13வது திருத்தச்சட்டம் இவற்றிற்கு இந்தியா கைகொடுக்கும் என சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சி.வி.விக்னேஸ்வரன், சுமந்திரன் போன்றோரின் நம்பிக்கை இன்னமும் அற்றுப்போகவில்லை. 30 வருடங்களுக்கு முற்பட்ட வரலாறுகளை பார்க்கின்றபொழுது தமிழினத்திற்கு நடந்தது என்னவென்பது நன்கு தெரிந்திருக்கவேண்டும். தமிழீழ கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டபொழுது மீண்டும் போர் வெடித்தது. இதனால் தமிழ் மக்களின் தியாகங்கள் இந்நாட்டிற்காக அளப்பரியதாகவிருக்கின்றது. பேச்சுக்களில் மாத்திரம் தமிழ் அரசியல்வாதிகள் இருந்துவிடாது அதனை செயற்படுத்துவதை அமுல்படுத்தவேண்டும். அரசியலின் பின்வாசல் கதவுகளால் இன்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலுள்ள மூத்த அரசியல்வாதிகள் செயற்படுவதை நிறுத்தவேண்டும். பதவிகளை வகிக்கின்ற அமைச்சரும், முதலமைச்சரும் பல்லுப்பிடுங்கிய பாம்புகளாகவே செயற்படுகின்றார்கள் என்பதைக் காட்டும் அவர்களது உரை இவ்வாறு அமையப்பெறுகிறது. வீரம் செறிந்த வார்த்தைகள் குறைக்கப்பட்டு அரசாங்கத்திற்கு பிடிகொடுக்காது தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன மறைக்கப்பட்டே இவர்களுடைய பேச்சுக்கள்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மாநாட்டில் அமையப்பெற்றன.

**ஹக்கீமின் உரை:-**

அடுத்து வரும் ஓரிரு மாதங்களுக்குள் இந்த நாட்டின் யாப்பு குறித்த எமது நிலைப்பாடுகளை மிக தெளிவான முடிவுகளோடு, ஒத்த தன்மையுள்ள எல்லா சக்திகளுடனும் பேசுவதற்கு தீர்மானித்துள்ளோம் என முஸ்லீம் காங்கிரசின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். இலங்கை தமிழரசுக்கட்சியின் 15ஆவது தேசிய மாநாட்டில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய அரசியல் சூழலில் ஆட்சியாளர்கள் தமது மேலாதிக்க செயற்பாடுகளை பலவீனமாக உள்ள எம்மீது பிரயோகிக்கின்ற தருணத்தில் இருக்கின்றோம். இந்த நிலையில் சரியான முறையில் தமிழரசுக்கட்சியின் ஆரம்ப போராட்ட வழிமுறைகளை மீண்டும் கையில் எடுத்து, அதே தடயத்தில் பயணிக்க வேண்டிய அவசியம் இருப்பதை உணர்கிறோம். மிகவும் இறுக்கமான சாத்வீக போராட்டத்தின் களம் ஒன்று அமையவேண்டிய அவசியத்தை நாம் மாத்திரமல்ல சிறுபான்மை இனத்திற்கு சகல உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துக்கின்ற அனைத்து சக்திகளும் வலியுறுத்தும் தருணத்திலே உள்ளோம். இவ்வாறான கூட்டு முயற்சியும், தேவைப்பாடும் உணரப்படும் இவ்வேளையில் தமிழ் பேசும் முஸ்லீம் சமூகம் எமக்கிடையில் இருக்கின்ற, பிரதேச, பிராந்திய ரீதியான முரண்பாடுகள் குறித்த, ஆக்கபூர்வமானதும், சினேகபூர்வமானதுமான பேச்சுக்களை மிகத்தெளிவாகவும், சரியான புரிந்துணர்வோடும், தாராளமான விட்டுக்கொடுப்போடும் எமது மனதில் நல்ல சிந்தனையை உருவாக்கிக்கொள்ளவேண்டிய அவசியம் ஒவ்வொரு தலைமைக்கும் இருக்கின்றது என்பதனை உணர்ந்தவர்களாகவே இந்த அவைக்கு வருகை தந்திருக்கின்றோம்.

இந்த அடிப்படையில் நாம் தொடர்ச்சியாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைமைகளோடு எமக்குள் உள்ள முரண்பாடுகளை களைந்து ஒருமைப்பட்டு எம்மை பிரித்தாள நினைக்கும் கபடத்தனமான அரசியல் தந்திரங்களை ஓரங்கட்டும் உறுதியுடனான ஒரு அரசியல் நிலைப்பாட்டை எமது சமூகம் சார்ந்து எடுக்க வேண்டிய தருணம் தற்போது வந்துள்ளது என திடமாக நம்புகின்றேன்.

தனியே தமிழ் பேசும் சமூகம் என வடக்குகிழக்கில் வாழும்எம் இருசமூகமும் அல்ல. மலையகத் தலைமைகளோடும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை தொடர்ந்தும் ஆதரித்து வந்த இடதுசாரி தலைவர்களோடும், தெற்கில் வாழும் நேர்மையாக சிந்திக்கும் நடுநிலைவாதிகளோடும்நாம்பேசுவதற்கு முயலவேண்டும். உண்மையான கூட்டாட்சி தத்துவங்களின் சரியான பரிணாமங்களை மிக இலகுவான முறையில் கொண்டு செல்கின்ற, அறிவுறுத்துகின்ற, சினேகபூர்வமாக இந்த விடயங்களைபரிமாறிக்கொள்கின்றபரந்து பட்ட கருத்தாடலை ஆரம்பிக்க வேண்டிய கடமைப்பாடு எங்களுக்கும் இருக்கின்றது என தெரிவித்தார்.

**சி.வி.விக்னேஸ்வரனின் உரை:-**

இதேவேளை தமிழ் மக்களையும், தமிழ்பேசும் முஸ்லிம் மக்களையும், தம்பால் ஈர்த்தே தந்தை செல்வா அரசியல் நடத்தினார் என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை இளைய மக்கள், தலைவர்களுடன் பகிராதிருப்பது எனக்கு ஒரு தளர்வு நிலையாகத் தோன்றுகின்றது. எவ்வாறு ஆயுதம் ஏந்தியவர்கள் தாம் இல்லாது போனால் பொதுமக்களுக்கு என்ன நடக்கும் என்று சிந்திக்காது போர் நடத்தினார்களோ அதேபோல் எமது சிரேஷ்ட தலைவர்கள் தாங்கள் சடுதியாகப் போய்விட்டால் என்ன நடக்கும் என்று சிந்தித்துச் செயலாற்றுகின்றார்களா என்ற கேள்வி என் மனதில் பூதாகரமாக இருந்து வருகின்றது.

வவுனியாவில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது மாநாட்டின் இறுதி அமர்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். மேலும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இந்தப் பதினைந்தாவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது உரிமைப் போராட்டம் தற்பொழுது ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. ஒரு சிலர் தவிர தமிழ் பேசும் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட வடமாகாணசபையானது தேர்தலில் வெற்றிகண்டு பதவியேற்ற பின்னர் பலவிதமான விடயங்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய ஒரு கடப்பாடு எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாணசபை தமிழர்சார் அரசியல் பின்னடைவுகளை அண்மையில் கண்டதன் காரணத்தால் வடமாகாணம் தான் இவ்வாறானதொரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என்று கூறலாம்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இவ்வளவு காலமும், அதாவது 2009ஆம் ஆண்டு மே மாதம் முதல், தாம் நினைத்ததைச் செய்து, தாம் நினைத்ததைக் கொடுத்து, தாம் நினைத்ததை எடுத்து போர் வெற்றியின் அடிப்படையில் சர்வாதிகார முறையில் அது நடத்திவந்த அரசியல் இயந்திரம் பெருவாரியாக வடமாகாண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடமாகாணசபை பதவி ஏற்றதும் அச்சபை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் அல்லது எவ்வாறு அதனை நடத்த வேண்டும் என்று தெரியாமல் திகைப்புற்றிருக்கின்றது. அதே நேரத்தில்வெளிநாட்டுசூழல், அயல்நாட்டு சூழல், உள்நாட்டு சூழல் என்பவை சற்று கரிசனை தந்து கொண்டிருப்பதால் அரசாங்க முக்கியஸ்தர்களைப் பொறுத்தவரையில் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். வடமாகாண முதலமைச்சரைப் பக்கத்தில் வைத்துத் தனிமையில் பேச வேண்டும் என்று சகோதரர்கள் இருவரும் காரணமில்லாமல் வெவ்வேறாகக் கருத்து வெளியிட்டிருக்க மாட்டார்கள். காரணமில்லாமல் நல்லூர் முருகனின் திருவிழாக்காலத்தில் "இன்னும் இன்னும் வழங்குவேன்" "நீங்கள் முன்னேர வேண்டும்" "உங்கள் பிரதேசம் முன்னேர வேண்டும்" என்று மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் தான் படித்த தமிழில் கூறியிருக்கமாட்டார். இது அரசாங்கத்தின் குழப்ப நிலை. எமக்குள்ளும் ஒரு குழப்பநிலை. எம்மைப் பொறுத்த வரையில் மூன்று விதமான எமது தமிழ் மக்கள் உலகெங்கிலும் இருந்து ஒருவரை ஒருவர் சாடி நிற்கின்றார்கள். "இன்று தந்ததை எடு" "தருவதை ஏற்றுக்கொள்" "தலையெழுத்தை மாற்ற முடியாது" "கிடைப்பதைச் சுருட்டிக்கொள்" என்று ஒருசாரார் கூறுகின்றார்கள். அவர்கள் கிடைப்பதைச் சுருட்டிக் கொண்டவர்களாகக் காலம் கடத்துகின்றார்கள்.

ஆனால் தீர்வோ கிடைத்தபாடில்லை. மேலும் ஒரு சாரார் முன்னர் ஒருவர் கண்ட கனவைத் தாங்கள் நனவாக்க முனைகின்றார்கள். முன்னர் கனவுகண்டவரின்கனவுநனவாகவில்லை என்பது பற்றி அவர்களுக்குக் கரிசனை இல்லை. அவ்வாறு கனவை நனவாக்க முனைபவர்கள் அதற்கான தந்திரோபாயங்களைக் கொண்டிருக்க வேண்டும். அவை அவர்கள் வசம் உள்ளதோ இல்லையோ நான் அறியேன். ஆனால் கனவுகண்டவர்களின் ஆத்ம அனுசரணையாளர்கள் என்று தம்மை அடையாளம் காட்டிக்கொண்டு குட்டையைக் கிளறிக்கொண்டிருக்கின்றார்கள் சிலர். அவர்களின் சூரத்தனங்கள் நாம் இன்று நடாத்திக் கொண்டிருக்கும் வடமாகாணசபையை 1988ம் ஆண்டில் உருவான வடகீழ் மாகாணசபையின் முடிவுக்கு எடுத்துச் சென்று விடுவனவோ என்று எண்ணவேண்டியுள்ளது. மாகாண சபை தொடர்ந்திருப்பதால் என்ன நன்மை என்பது அவர்கள் சித்தாந்தம்? மூன்றாவது சாரார் நிலைமையை முழுமையாக உணர்ந்து கொண்டு காலத்திற்கு ஏற்றவாறு, கருத்துக்கு ஏற்றவாறு கன்காணிப்புடன் கருமம் ஆற்றி வருகின்றார்கள். எனினும் அவர்கள் நோக்கிச் செல்லும் தீர்வு யதார்த்தமானது. எல்லா நாடுகளும் ஏற்றுக்கொள்ளக் கூடியவை. அரசாங்கமும் அவர்களின் அறிவுரைகளை ஆதரித்தே செல்ல வேண்டியிருக்கும்.

எனவே வடமாகாணசபை வந்தமை பெரும்பான்மையினரை மட்டுமன்றி எம்மையும் சில.குழப்பங்களில் மாட்டிவிட்டுள்ளது. இந்தக் குழப்ப நிலைக்குள்ளேதான் எங்கள் பதினைந்தாவது தேசிய மாநாடு இங்கு நடைபெறுகின்றது. இத்தருணத்திலே இன்றைய இந்த நிலையில் கட்சியின் கடப்பாடு என்ன என்று ஆராய்வது உசிதமானது. மிகச் சுருக்கமாகக் கூறுவதானால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஓர் அங்கமாக இருந்து வடகிழக்கு தமிழ்பேசும் மக்களுக்கு சமத்துவத்தையும், சமாதானத்தையும், பொருளாதார அபிவிருத்தியையும், பாதுகாப்பையும், பயன்தரு நீதியையும் பெற்றுக் கொடுக்க, முயன்று முன்னேறுவதே முக்கிய கடப்பாடாகத் தோன்றுகின்றது. இக்கட்சியின் ஆரம்பத்தை எம் மனதில் நாம் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரே நாட்டினுள் அஹிம்சை வழியில் எமது அதிகார வரம்புகளை அடையாளம் கண்டு அங்கு நாம் எமக்கென ஒரு ஆட்சியை நிறுவவேண்டும் என்றே எமது ஆரம்ப கர்த்தாக்கள் முடிவெடுத்திருந்தார்கள். **தொடரும்...**

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## மீண்டும் இந்தியாவை நம்புவது முட்டாள்தனம்

திம்பு தொடக்கம் டோக்கியோ வரையான பேச்சுக்கள் முதல் இந்தியாவை நம்பியே தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர், தமிழ் மக்கள் போன்றோர் ஏமாற்றப்பட்ட வரலாறுகளே உள்ளன. விடுதலைப்போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் ரெலோ, புளொட், ஈரோஸ் போன்ற கட்சிகளை ஒருங்கிணைப்புச்செய்த இந்தியரசாங்கம், பின்னர் தனது சுயலாபம் கருதி ஓரங்கட்டியது. இயக்கங்களுக்கிடையே பிரச்சினைகளை உருவாக்கி தமிழினத்தை தமிழனே அழித்துக்கொள்ளும் அளவிற்கு பகைமையை உருவாக்கியது. இராஜதந்திர ரீதியிலான அனுகுமுறைகள் எனக்கூறி தமிழினத்தை ஏமாற்றிவந்தது. சம்பந்தன், ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, சுமந்திரன் போன்றோர் இவ்வரலாற்றினை நன்கு அறிந்தவர்கள்.

ஆயுதப்போராட்டக்குழுக்களை எதிர்த்து அல்லது அக்குழுக்களை வளரவிடாது எந்தவொரு நாடும் ஆட்சியமைத்த வரலாறுகள் இல்லை. அதுபோன்று எந்தவொரு அரசாங்கமும் தனது இரகசிய நடவழக்கைகளுக்காகவும், பிற நாடுகளுடன் யுத்தத்தினை தூண்டிவிடுவதற்காகவும் பயங்கரவாத அமைப்புக்கள், பாதாள உலகக் குழுக்கள் அல்லது கடத்தல்காரர்கள் போன்றோரை பயன்படுத்துவது வழக்கம். விடுதலைப்புலிகளின் போராட்டத்தினை பொறுத்தவரையில் அது இன்று சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு பிரதான சூத்திரதாரியாக விருந்தவரும், புளொட் அமைப்பினைச் சேர்ந்தவருமான தராகி என அழைக்கப்படும் டி.சிவராம் என்பவரே ஆகும். இன்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பானது சிறந்த நிலையில் இருப்பதற்கு காரணமாக சிவராம் அவர்கள் வித்திட்டுச்சென்றிருக்கின்றார். இவ்வாறிருக்கின்றபொழுது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சியினைச் சார்ந்தவர்கள் இயக்கக்கட்சிகளை ஓரங்கட்டி தமிழ்மக்களுக்கு சுமுகமான தீர்வினை பெற்றுக்கொடுக்க முற்பட்டாலும் கூட அரசாங்கம் அத்தீர்வுத்திட்டத்திற்கு உடன்படமாட்டாது.

அரசாங்கமே பயங்கரவாதத்தினை மீண்டும் வளர்த்துவிடும். தமிழரசுக்கட்சியின் தந்தை என வர்ணிக்கப்பட்ட தந்தை செல்வா, தமிழ் மக்களுக்கு அவர் நடத்திய அறவழிப்போராட்டங்கள், பாராளுமன்ற வெளிநடப்புக்கள் மூலம் எதனைச் சாதிக்கமுடிந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் 03 வருடங்கள் சிறைவைக்கப்பட்டதுதான் மிச்சம். தமிழரசுக்கட்சி என்பது ஆயுத கலாசாரமற்ற சிறந்த கட்சி என்பது உண்மைதான். அவர்களுடைய பாதை, அனுகுமுறைகள் அனைத்தும் அரசுடன் ஒத்துப்போகுமாகவிருந்தால் அவர்களை அருகில் வைத்துக்கொள்ளும்.

தந்தை செல்வாவிற்கு பின் பிரபாகரனுடைய போராட்டத்தினால் தான் இன்று சர்வதேசமே தமிழ் மக்களை திரும்பிப்பார்க்கும் நிலையில் உள்ளது. இன்று ஆயுதப்போராட்டம் அற்ற நிலையில் தமிழ்மக்களுடைய உரிமைகளை பறித்தெடுக்கும் முயற்சியில் அரசு வடமாகாணசபை, தீர்வுக்குழு என்று நியமித்து அதிகாரங்களை வழங்காது ஏமாற்றிவருகின்றது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலுள்ளவர்கள் குறிப்பாக தமிழரசுக்கட்சி சார்ந்தவர்கள் சிந்தித்து செயற்படவேண்டும். இந்தியா மீண்டும் எம்மை பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்திருக்கிறது. ஆனாலும் அதிலும் ஆபத்தினை வைத்திருக்கிறது. பிரதமர் ராஜீவ் காந்தியினை அவமானப்படுத்தி அனுப்பியது இலங்கையரசு. அதனை மறந்து ஜே.ஆருடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டதும் இந்தியரசுதான்.

பின்னர் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் நடவழக்கையில் ஈடுபட்டதும் இந்தியரசே. இதனையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதைப்போன்று இந்தியா எமக்குச் செய்த பல துரோகச்செயல்களை உதாரணப்படுத்திக் கூறலாம். எனவே சிந்தித்துச்செயற்படுவது தமிழினத்திற்கு சிறந்தது.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

28

இவர்கள் காப்பரண் வேலை செய்த போது உரப்பைகள், மண் வெட்டிகள், சவள்கள், அது இதுவென்றுஓடி ஓடி ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்ததிலிருந்து எல்லாப் பின்னணி வேலைகளுமே மேஜர். கஜேந்தி சண்டை நடந்துகொண்டிருந்தபோது தனது காவும் குழுவை அனுப்பி, வேகமாகக் காயக்காரர்களைத் தனது பின்னணிப் பதுங்குகுழிக்கு எடுத்து,



அவசர முதலுதவிகளைச் செய்து ஊர்திகளிலேற்றி மருத்துவ நிலைகளுக்கு அனுப்பிக்கொண்டேயிருந்தார். ராங்கிகள் உள்நுழைந்து உலாவியதைப்பற்றியோ, அடர்த்தியான எறிகணை மழையைப்பற்றியோ கஜேந்தி சிறிதும் அலட்டிக்கொள்ளவில்லை.

கஜேந்தியின் காவும் குழுவைச் சேர்ந்த சிவாஜினி ஒரு காயப்பட்ட போராளியைத் தூக்கிக்கொண்டு கஜேந்தியின் இடத்துக்கு ஓடி வந்தார். சிகிச்சைக்காக அவரைப் படுக்கவைத்தபோதுதான் வழியிலேயே அவரின் உயிர் பிரிந்துவிட்டிருந்தது தெரிந்தது. வித்துடலின் முகத்தை உற்றுப்பார்த்த சிவாஜினிக்குக் கண்கள் கலங்கின.

கஜேந்திக்கும் மனதைப் பிசைந்தது. இன்னமும் அகற்றப்படாமல் களமுனையில் கிடக்கும் காயக்காரர்களின் எண்ணிக்கை நினைவுக்கு வர, மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிவாஜினி தானாகவே ஆறுதலடையட்டும் என்று பேசாமலிருந்தார். இதெல்லாம் ஆகக்கூடியது ஒரு இரண்டு நிமிட நிகழ்வுதான். தன்னைத் திடப்படுத்திக்கொண்ட சிவாஜினி, கஜேந்தியைக் கூப்பிட்டார்.

அக்கா இது என்ர தங்கச்சி. இதிலேயே இருக்கட்டும். நான் பிறகு வந்துபார்க்கிறன். என்று சொல்லிவிட்டு ஓடிப்போனார். கஜேந்தி திகைத்துப்போனார்.

சண்டைதொடங்கியநேரம்குழுக்களாகப் போன காவும் குழுவினர் இப்போது சிவாஜினியைப்போலவே தனித்தனியே போய் வந்துகொண்டிருந்தனர். காயக்காரரையோ வித்துடலையோ முதலில் காணுபவர் தூக்கித்தோளில் சுமந்தவாறு ஓட்டத்தில் பின்னுக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு மறுபடியும் ஓட்டத்தில் முன்னுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். ஆளை ஆள் பார்த்துக்கொண்டிருக்க யாருக்கும் நேரம் இருக்கவில்லை. எறிகணை மழை இவர்களையும் விட்டு வைக்கவில்லை. காயக்காரர்களைத் தூக்கி வந்தவர்களும் காயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். வித்துடல்களைச் சுமந்து வந்தவர்களும் வித்துடல் ஆனார்கள்.

தூக்குவதற்கெனப் போனவர்களைக் காணவில்லை என்று கஜேந்தி ஓடிப்போய் நிலமையைப் பார்த்து தன்னிடம் எஞ்சியிருந்தவர்களை மீளவும் மீளவும் ஒழுங்கமைத்து அனுப்பிக்கொண்டிருந்தார். இருளும்வரை காத்திருந்து, வெட்டைப் பகுதிக்குள் புகைக்குண்டுகளை அடித்து, அந்தப் பக்கம் தனித்துநின்ற அணிகளை இந்தப் பக்கம் நின்றவர்கள் தம்மோடு எடுத்தார்கள். இரவிரவாக எல்லோருமாகப் புதிய நிலைகளை வெட்டத் தொடங்கினார்கள். இவர்கள் நிலைகளை வெட்டிக்கொண்டிருக்கையிலேயே நிர்மாவுடன் வந்த எங்களுடைய கண்ணிவெடி அணியினர் முடிந்தவரை வேகமாகக் கண்ணிவெடிகளை விதைத்தனர்.

அந்நேரம், வெற்றி நிச்சயம் எதிர்நடவடிக்கைக் கட்டளைப் பணியகத்தின் பொறுப்பாளராக இருந்த கேணல் கருணா, இன்று வடமுனை சமர்க்களத்தில் பெரும் சக்தியாக மிளிரும் மாலதி படையணி, தான் கடந்துவந்த சமர்க்களப் பாதையெங்கும் தனது திறனாற்றலை வெளிப்படுத்திவந்துள்ளது. இவ்வகையில் விடுதலைப்புலிகளின் போரிடும் ஆற்றலை போர்க்கள நுட்பங்களை உலகுக்கு உணர்த்திநின்ற பெருஞ்சமரான ஜெயசிக்குறு எதிர்ச்சமர் இந்தப் படையணியின் வரலாற்றில் அதி உன்னதமானதொன்றாகும். ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நீடித்த இச்சமரில் இந்தப் படையணி காட்டிய ஈகமும் வீரமும் இணையற்றவை என்கின்றனர்.

இந்த அடி அடித்தும் புளியங்குளத்தை நெருங்கப் படையினரால் முடியவில்லை. ஹிட்லரின் ஜேர்மனிய இராணுவம் ரஷ்யாவின் தரைத்தோற்றம், காலநிலை மாற்றம் என்பவற்றை உணர்ந்துகொள்ளாமல், பெரும் படையாக ரஷ்யாவினுள் புகுந்து குளிருக்கும் பனிக்கும் ஈடுகொடுக்கமாட்டாமல் மடிந்து சிறு படையாக வெறுங்கையோடு திரும்பிவந்த முட்டாள்தனம், அத்தோடு உலகில் முடிவுக்குவரவில்லை. புளியங்குளத்துக்குப் போகின்றோம் என்று பறையறைந்தவாறு நெடுஞ்சாலைக்குப் பக்கவாட்டாகத் தேவையற்று நகர்ந்து வன்னிக்காட்டின் இயல்பைப் புரிந்துகொள்ளாமல் அதன் மர்மத்துக்குள் புதைந்து என்ன செய்வதென்று தெரியாமல் நின்ற முட்டாள்தனம் இலங்கையின் இராணுவ வரலாற்றில் வெற்றி நிச்சயம் நடவடிக்கைக் காலத்தில் பல தடவைகள் நடந்தன.

மருதமரச் சோலைக்குள் எத்தனை நாட்களுக்கென்று அத்தனை ராங்கிகளையும் வைத்துக்கொண்டு நிற்கமுடியும்? ராங்கிகள் தங்கள் பழைய நிலைகளுக்குத் திரும்பின. ஆனால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியறிக்கையில் படையினர் பாரிய முன்னேற்ற நகர்வொன்றைச் செய்ததாக மறுபடியும் மறுபடியும் அறிவித்தது. அந்த வானொலி அந்நேரத்தில் ஒலிபரப்பும் தகவல்களில் சாவு அறிவித்தல்களைத்தவிர ஏனையவை நம்ப முடியாத பொய்களாகவே இருந்தன.

புதிதாக அமைக்கப்பட்ட காப்பரண்களில் மீளமைக்கப்பட்ட எங்களின் கொம்பனி நின்றது. எங்களுடைய எல்லாப் பொறுப்பாளர்களுமே தமது பொறுப்பிலிருந்து ஒருபடிகீழே இறக்கப்பட்டிருந்தோம். ஆனந்தி கொம்பனிப் பொறுப்பாளராகவும் முல்லை பதில் பொறுப்பாளராகவும் விடப்பட்டிருந்தனர். புளியங்குளத்தைப் பிடிக்கும் எதிர்த்தரப்பின் நோக்கத்தை முறியடிப்பதில் நாங்கள் வெற்றி கண்டிருந்தோம். ஆனால் இன்னும் வேகமாகச் செயற்பட்டு, உயிரிழப்புகளைக் குறைக்கும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கலாம் என்பதற்காக அந்தப் ஒறுப்பு தலைவரால் வழங்கப்பட்டிருந்தது. பொறுப்புக் குறைக்கப்படுவதை காற்று இறங்குதல் என்று அந்நேரம் நகைச்சுவையாகக் குறிப்பிடுவோம். வெற்றி நிச்சயம் களமுனையில் காற்று இறங்குவதைப்பற்றி ஒருவரும் கவலைப்படுவதுமில்லை. காற்று ஏறுவதையிட்டுப் பெருமைப்படுவதுமில்லை. எல்லோருடைய மனமும் படைத்தரப்பின் நோக்கத்தைச் சிதறடிக்கும் தலைவரின் எண்ணத்தை ஈடேற்றவேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தது.

இலங்கையின் வில்பத்து, யா எல காட்டுப் பகுதிக்குள் அமெரிக்கப் பயிற்சி ஆசிரியர்கள் வந்து தங்கிநின்று இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ அணிகளுக்குப் பயிற்சி அளிக்கும் இரகசியம் இப்போது எல்லோருமே அறிந்த விடயமாகியிருந்தது. ஆனால் எமது தலைவரோ தன் நண்பனான இயற்கையையும், தத்துவாசிரியரான வாழ்க்கையையும், வழிகாட்டியான வரலாறையும் வைத்தே எங்களை வழிநடத்திக்கொண்டிருந்தார்.

நேரடியாகப் புளியங்குளம் வரமுடியாமல் இராணுவம் பக்கவாட்டாக மேவ மேவ, புளியங்குளத்தைப் பாதுகாத்துக்கொண்டிருந்த எமது கொம்பனிகளும் இராணுவத்தின் போக்குக்கேற்ப மேவிமேவி அரண்களை அமைத்தன. ஒருநாள் இரவு உடனடியாகப் புதூருக்கு வருமாறு கேணல் கருணா அவர்களிடமிருந்து அறிவித்தல் கிடைத்தது. நாங்கள் உடனேயே ஓட்டமும் நடையுமாகப் புதூருக்குப் போனோம்.


புளியங்குளத்துக்கான எமது விநியோகப் பாதையைத் தடுக்கும் நோக்கத்துடன் நகரவிருந்த படையினரைத் தடுத்துநிறுத்தும் நடவடிக்கைக்காகவே ஆனந்தியின் கொம்பனி புதூருக்கு வந்தது. யாழ்.நெடுஞ்சாலைக்கு வலதுபுறம் மூன்று நிலைகளும் இடதுபக்கம் ஏனைய நிலைகளுமாக அரைவட்ட வடிவில் திரும்பி, புளியங்குளத் தளத்தைப் பாதுகாத்தவாறு இடது வெளிப்புறப் பாதுகாப்பரண்களில் ஏற்கனவே நிற்கும் செல்வியின் கொம்பனியைச் சந்திக்கக்கூடியவகையில் ஒரு கற்பனைக் கோட்டைக் கீறி, அதற்கேற்ற வியூகத்தில் நிலைகளை அமைக்கவேண்டும். புதூர்ச்சந்தி படையினரின் கைகளில் விழுந்து, புளியங்குளத்துக்கான எமது விநியோகப் பாதை தடைப்படாமல் தடுப்பது மாலதி படையணியிடம் கொடுக்கப்பட்ட பணி.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்


| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 135. | 2ம்.லெப்.சரண்யா | பவானி கிருஸ்ணசாமி | கிளிநொச்சி | 1997.01.09 | பரந்தன்-ஆனையிறவு |
| 136. | 2ம்.லெப்.தனுசா | விஜிதா பேர்ணாந்து | யாழ்ப்பாணம் | 1997.01.09 | பரந்தன்-ஆனையிறவு |
| 137. | 2ம்.லெப்.ஆரணி | கிருஸ்ணவேணி சக்திவேல் | முல்லைத்தீவு | 1997.01.09 | பரந்தன்-ஆனையிறவு |
| 138. | 2ம்.லெப்.தவமலர் | முத்துக்குமாரி முருகேஸ் | கிளிநொச்சி | 1997.01.09 | பரந்தன்-ஆனையிறவு |
| 139. | 2ம்.லெப்.விஸ்வம் | இராஜேஸ்வரி சண்முகம் | மன்னார் | 1997.01.09 | பரந்தன்-ஆனையிறவு |
| 140. | லெப்.மாலா | மேரிபவானி ஆசைமுத்து | யாழ்ப்பாணம் | 1997.01.09 | பரந்தன்-ஆனையிறவு |

# இந்தியா தமிழினத்திற்கு துரோகம் இழைக்க நேரிட்டால் மோடியை இழக்க நேரிடும்



இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தினைப் பொறுத்தவரையில் காலத்திற்குக் காலம் பல்வேறு மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டுவந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளையும், ஏனைய இயக்க அமைப்புக்களையும் உருவாக்கிய இந்தியரசானது இவ் இயக்கங்கள் வளர்ச்சியடைவதற்கு உந்துசக்தியாக இருந்தது. இவ்விடயம் தொடர்பாக தளபதி.கேணல்.கிட்டு அவர்கள் கருத்துத்தெரிவிக்கையில், ஒற்றுமையுடன் செயற்பட்டுக் கொண்டிருந்த விடுதலை அமைப்புக்களைச் சீர்குலைக்க முயன்றது இந்தியரசே.

அனைத்து இயக்கங்களும் வலுவான நிலையில் தான் இருந்தன. 1987ம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பை ஏனைய இயக்கங்களுடன் இணைந்து தாக்கியழிக்கவேண்டும் என்று ஒரு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அக்காலகட்டத்தில் சிம்மசொப்பனமாக விளங்கிய அமைப்பு விடுதலைப்புலிகள் அமைப்பே ஆகும். ஆகவே தான் நாம் முந்திக்கொண்டோம். 90க்கும் மேற்பட்ட ரெலோ அமைப்பினரைக் கொல்லவேண்டிய நிலையேற்பட்டது. அதற்கு நான்தான் தலைமை



தாங்கினேன். அதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப் என்ற அமைப்பையும் தாக்கியழிக்கவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தோம்.

காரணம் அவர்கள் எமக்கு விரோதமான செயற்பாடுகளை முன்னெடுத்தனர். அவர்கள் அப்பொழுது 450 பேர் வரையில் காணப்பட்டனர். எனது உத்தரவு என்னவென்றால், ரெலோ இயக்கத்தை அழித்ததுபோன்று ஈ.பி.ஆர்.எல்.எப் இனை அழித்துவிடக்கூடாது. அவர்களை உயிர்ச்சேதமில்லாமல் அவர்கள் இருக்கும் முகாம்களைச் சுற்றி சூடுகளை நடத்துமாறு உத்தரவிட்டேன். அதன்பிற்பாடு வீதிவீதியாக அவர்களைச் சரணடையுமாறு ஒலிபெருக்கியின் மூலமாக அறிவித்திருந்தோம்.

அதன் பின்னர் கிட்டத்தட்ட 400 பேர் வரையில் சரணடைந்திருந்தார்கள். இவ்வாறுதான் ஏனைய இயக்கங்களுக்கும் நாம் செய்தோம். அந்த ஒப்பரேஷனுக்கு தலைமை தாங்கியவன் என்ற ரீதியில் கூறுகின்றேன். இதற்கிடையில் சுது மலையில் வைத்து தலைவர் பிரபாகரன் இந்தியாவிற்கு அழைக்கப்படுகின்றார். இந்திய இராணுவத்துடனான தாக்குதலுக்காய் எமது அணிகளை தயார் நிலையில் வைத்திருந்தோம்.

இக்காலகட்டத்தின் பொழுது இலங்கையரசாங்கத்திலிருந்த ரண சிங்க பிரேமதாஸ இந்திய இராணுவத்தினை தாக்கியழிப்பதற்கான ஒத்தாசைகளை வழங்கியிருந்தார். அவர்களின் மூலமாகவே ராஜீவ் காந்தியைக் கொலைசெய்யும் நிலைக்கு விடுதலைப்புலிகள் தள்ளப்பட்டனர். இது அனைத்திற்கும் காரணமாக அமைந்தவர்கள் சோனியா காந்தியின் அரசாகும் என்று கூறியிருந்தார் தளபதி கிட்டு.

அதன் பின்னர் தாக்குதல் தளபதிகளாகவிருந்த தளபதி. விக்ரர், மாத்தையா, யோகரட்ணம் யோகி போன்றவர்கள் இலங்கை -இந்திய ஆயுத ஒப்படைப்பில் பங்குபற்றியிருந்தனர். இதில் பலாலியில் வைத்து திருவாளர் யோகரட்ணம் யோகி முதற்கட்டமாக ஆயுதங்களை ஒப்படைத்தார். இவை இந்தியரசின் ஒரு இராஜதந்திர நடவடிக்கையாகவே இருந்துவந்தது. இந்த ஆரம்பத்தினைக் கூறவேண்டியதன் காரணம், அதே ஆரம்பத்தின் நிகழ்வுகளே தற்பொழுது ஆட்சியிலிருக்கும் இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சி என்கின்ற அரசினால் முன்னெடுக்கப்படுகிறது. இக்கட்சியினைப் பொறுத்தவரையில் தற்பொழுது ஆட்சிபீடத்தில் ஏறியிருக்கும் நரேந்திரமோடி அவர்கள் இலங்கைப்பிரச்சினையில் எடுத்துள்ள முன்னெடுப்புக்கள் இலங்கையரசினை அச்சுறுத்துவதற்காகவோ அல்லது தமிழ் மக்களுக்கான நிரந்திர தீர்வினை பெற்றுத்தருவதற்காகவோ அல்ல. தனது சுயநல இலாபத்தினைக் கருதியே நரேந்திரமோடி தலைமையிலான அரசு செயற்பட்டுவருகிறது.

நரேந்திரமோடியுடன் நேரடியாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தியது. இதில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. நரேந்திரமோடியின் பதவியேற்பு வைபவத்திற்கு தமிழ்நாட்டினை எதிர்த்து உள்வாங்கிக்கொண்ட இந்தியரசு, இரகசியமான முறையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அழைத்திருந்தது. இது இலங்கையரசிற்கு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தியதாகக் கூறப்பட்ட அதேவேளை பொருளாதார ரீதியில் இலங்கையரசுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதாகவே இந்தியரசு செயற்படுகின்றது.

இந்தியரசின் உற்பத்திப்பொருட்கள் 60 சதவிகிதம் இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்றது. இதில் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் பல்வேறு கைத்தொழில்கள் ஒப்பந்த கால அடிப்படையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இவ் ஒப்பந்தங்கள் இருபது மற்றும் இருபத்தைந்து என்ற ஆண்டுகளில் இருப்பதன் காரணமாக இலங்கையரசினை இந்தியரசு எந்தவொரு காலத்திலும் பகைத்துக்கொள்ள முடியாது.

பிரதான காரணமாக 29 மாநிலங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள இந்தியாவில் அவை தனித்தனி மாநிலங்களாக பிரிவதனை இந்தியரசு ஒருபோதும் ஒத்துக்கொள்ளாது. இலங்கையில் தனிநாடு கோரப்படுமாகவிருந்தால் இந்தியாவிலுள்ள 29 மாநிலங்களும் தனித்தனியாக பிரிந்துசெல்ல வேண்டிய நிலையேற்படும் என்கின்ற காரணத்தினால் இந்தியரசு ஒருபோதும் உடன்படாது. இவையனைத்தும் இந்தியாவினுடைய மூல காரணங்களாக அமையப்பெறுகிறது. இலங்கைப்பிரச்சினையில் நீண்டகால தொடர்பினை ஏற்படுத்தவேண்டுமாயின், இலங்கையுடன் நீண்டகால உறவினை வைத்துக்கொள்ளவேண்டுமாயின் விடுதலைப்போராட்டம் என்ற ஒன்று இருக்கின்றது என்பதனை இந்தியா உலகிற்குக் காட்டியே ஆகவேண்டும்.

அவ்வாறாயின் மாத்திரமே அயல்நாடான இலங்கையை தனதுகைகளில் வைத்திருக்க முடியும் என்கின்ற நம்பிக்கையுடனும், உலக மகா யுத்தம் என்ற ஒன்று ஏற்படுமாகவிருந்தால் அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் இலங்கையுடன் உறவினையும் பேணவேண்டும். இந்தியாவிற்கு சென்றுவந்த சம்பந்தன், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், பொன்.செல்வராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றோரின் கருத்துக்களின்படி, இலங்கையரசு பயப்படுகின்றது என்று மக்களாகிய நாம் நினைத்துக்கொண்டாலும் அவ்வாறானதொரு சூழ்நிலை இல்லை. ஆக இனப்பிரச்சினைக்கான தீர்வினை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்ற கருத்து ஒருபுறமிருக்க, மீண்டுமொரு ஆயுதக்கலாசாரத்தினை உருவாக்கும் நோக்கோடு இந்திய அரசாங்கம் மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் போராட்டத்தினை மழுங்கடித்த 52 நாடுகளும் முழுமூச்சாக செயற்படுகின்றது. குறிப்பாகச் சொல்லப்போனால் அமெரிக்காவின் தலையீடு இதில் அதிகம் எனக் கூறலாம்.

1987ம் ஆண்டு காலப்பகுதியில் அல்லது இறுதிக்கட்ட யுத்தத்தில் விடுதலைப்புலிகளை ஏமாற்றியதைப்போன்று, இந்தியரசு நினைக்குமாகவிருந்தால் நரேந்திரமோடி அவர்களை இழக்க நேரிடும். அது எவ்வாறெனில் நரேந்திரமோடிக்கு எதிரான நாடுகளே விடுதலைப்புலிகளை வளர்ச்சியடையச்செய்து அதற்கான முன்னெடுப்புக்களை ஏற்படுத்தி நரேந்திரமோடியின் இழப்பிற்கு மீண்டும் விடுதலைப்புலிகளே காரணம் எனக்கூறி தமிழ் மக்களுக்கும், இந்தியரசிற்கும் இருக்கின்ற உறவுகளை துண்டிப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்தியா, அவுஸ்திரேலியா, எரித்தெரியா, மியன்மார், அமெரிக்கா, கனடா, சுவிஸ் போன்ற நாடுகளில் விடுதலைப்புலிகள் மீள்உருவாக்கம் எனக்கூறிக்கொள்ளும் இலங்கையரசு அப்படியாயின் அவர்கள் எவ்வாறான தாக்குதல் திட்டங்களை ஏற்படுத்தப்போகின்றார்கள்? இறுதியில் யாருக்கு இவ்விடயம் சாதக பாதகமாக அமையும் என பலராலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தினை பொறுத்தவரையில் இன்றும் கூட வலுவான முறையில் அமெரிக்காவிலுள்ள நாடுகடந்த தமிழீழ அரசின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. அதாவது இந்தியரசு, இலங்கையரசு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக்கட்சி நினைக்கும் அளவிற்கு விடுதலைப்புலிகளின் ஆளுமையையும், ஆழத்தையும் அறிந்துகொள்வது கடினமானதொன்று. மீண்டுமொரு ஆயுதக்கலாசாரம் உருவாக்கப்பட்டு பிரச்சினைகள் தீவிரமடைகின்றபொழுது இந்தியா தலையிட்டு தனது செல்வாக்கினை பலப்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகளே திரைமறைவில் இடம்பெற்றுவருகின்றது.

அவ்வாறான சூழ்நிலைகள் உருவாவதற்கே இந்தியாவின் ரோ என்கின்ற புலனாய்வு அமைப்பு செயற்பட்டுவருகின்றது. தமிழ் மக்களுக்கு 13வது திருத்தச்சட்டம் என்றும் அதற்கும் அப்பால் சென்றும் தீர்வுகாணப்படவேண்டும் என்று தற்பொழுது ஆட்சியிலிருக்கும் நரேந்திரமோடி அவர்கள் கூறிவந்தாலும் கூட தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாறுகளே காணப்பட்டுவருகிறது.

அமெரிக்கா உட்பட அனைத்துலக நாடுகளும், ஜெனிவா சமாதான அமைப்புக்களும், நோர்வேயின் தூதுவர்களும் இலங்கையரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் நெருக்கமாகப் பேசி வந்த சமாதானப்பேச்சுக்களை குழப்பியடித்தது இந்தியாவின் சோனியா காந்தி தலைமையிலான அரசே. தனிநாடு கோரப்பட்டு விடுதலைப்புலிகள் ஆட்சிக்கு வருகின்ற பொழுது இந்தியரசு பல்வேறு அசெளகரியங்களைச் சந்திக்கநேரிடும் என்கின்ற காரணத்தினால் சோனியாவின் அரசு விடுதலைப்புலிகளின் போராட்டத்தையும், தமிழ் மக்களுக்கான இன அழிப்பையும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தது மட்டுமல்லாது அதில் குளிரும் காய்ந்தது.

இந்தியபிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டமைக்காக இலங்கைத்தமிழர்களை பழிவாங்கியது இந்தியரசு. தற்பொழுது இருக்கின்ற உலக வல்லரசுகள் அனைத்தும் நரேந்திரமோடியினை தன்வசம் இழுத்துக்கொள்ளவேண்டும் அல்லது அவரின் கதையினை முடிக்கவேண்டும் என்ற நிலையிலே உள்ளன. இவ்வாறானதொரு செயற்பாட்டினை யாரின் மூலம் செயற்படுத்தலாம் என திட்டம் தீட்டிவரும் அதேநேரம், இலங்கையில் வாழும் தமிழினத்திற்கு இந்தியரசு மீண்டுமொரு துரோகம் இழைக்கநேரிடுமாகவிருந்தால் இந்தியப்பிரதமர் மோடி மாத்திரமல்ல இன்னும் பல உயர் அதிகாரிகளை இழக்கவேண்டியதொரு சந்தர்ப்பம் ஏற்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நெற்றிப்பொறியன்

# யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த சர்வதேசம், மஹிந்தவை தூக்கிலிட முயற்சி



இலங்கையில் யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு 05 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமைகள் இன்னமும் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது. சர்வதேச மட்டத்தில் இலங்கையில் சமாதானமென எடுத்துக்காட்டும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு தனக்கு சர்வதேசமே ஒத்துழைப்பு வழங்கியதாக பகிரங்கமாகவே குறிப்பிட்டிருந்தார்.

யுத்தத்தின் பின்னர் மக்களினுடைய பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவொன்றினை ஆரம்பித்து வைத்தார். இந்த நல்லிணக்க ஆணைக்குழுவும், தருஸ்மனும் இதனோடு படாதபாடுபட்டனர். இந்த வகையில் என்.டி.ரி.வி தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்த விடயங்களாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினூடாக அனைத்து விடயங்களையும் முன்னெடுத்துள்ளோம். மனித உரிமைகள் குற்றச்சாட்டுகளை ஒப்புதலளிக்கும் வகையில் இது செயற்படும். அவர்கள் ஒரு தீர்மானத்தினை முன்வைப்பார்கள். அதனூடாக பிரச்சினைகளைத் தீர்க்கமுடியுமென குறிப்பிட்டிருந்தார்.

அதேநேரம் சர்வதேச நாடுகள் மஹிந்த ராஜபக்ஷவை தற்பொழுது கொலைகாரன் என்ற பட்டியலில் அதாவது சதாம் ஹூசைன், ஹிட்லர், கடாபி, இடிய மீன் போன்ற கொலைகார இனவெறியர்கள் பட்டியலில் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரினையும் இணைத்துள்ளனர். இருந்தபோதிலும் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நாட்டில் நிலவும் தேசிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பாராளுமன்றில் கட்சித்தலைவர்களை சந்தித்து கலந்தாலோசித்த பின்னரே தீர்வுகள் முன்னெடுக்கப்படும் என அலரிமாளிகையில் வைத்து தெரிவித்திருந்தார்.

விடுதலைப்புலிகளுடனான போராட்டத்திற்கு ஒப்புதல் வழங்கிய சர்வதேசம் இன்று ஏன் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை கொலைகாரப்பட்டியலில் இணைத்துள்ளது. அதற்கு காரணம் என்ன? என்று பார்க்கின்றபொழுது, சர்வதேச நாடுகளின் அதிகாரபூர்வமான தன்மையையே எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையில் உள்நாட்டுப்போரின் போது இடம்பெற்ற பல்வேறு குற்றங்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணைக்கான அனுமதி வழங்கப்படவேண்டுமென அனைத்துலக மன்னிப்புச்சபை கேட்டிருந்தது. இலங்கை மீது சுயாதீன அனைத்துலக போர்க்குற்ற விசாரணையொன்று மேற்கொள்ளப்படவேண்டுமென்றுவடமாகாணசபைஜனவரி 27ல் கோரியிருந்ததாக அனைத்துலக மன்னிப்புச்சபை தெரிவித்திருந்தது.

2013 செப்டெம்பரில் இடம்பெற்ற வடமாகாணசபைத்தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புபெரும்பான்மையான வெற்றியினைப்பெற்று வடமாகாண சபையினை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருந்தது. இலங்கையில் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட சபை அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனக் கூறுவதானது இலங்கையின் உள்நாட்டுப்பொறிமுறைகளில் மக்கள் சிறிதளவேனும் நம்பிக்கைகொள்ளவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றது என இந்தியாவிற்கான அனைத்துலக மன்னிப்புச்சபையின் நிறைவேற்று சபை இயக்குனர் ஜி.ஆனந்தபத்மநாதன் குறிப்பிட்டிருந்தார்.

இதனைக்கருத்திற்கொண்டு இந்தியா, இலங்கையரசின் மீது அழுத்தம் கொண்டுவரவேண்டுமென்றும் இறுதிக் கட்டத்தில் அரசினாலும், விடுதலைப்புலிகளினாலும் அனைத்துலக போர் சட்ட நியமங்களை மீறி மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பாக சுயாதீனமான அனைத்துலக விசாரணை முன்னெடுக்கப்படுவதற்கு இலங்கையரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென இந்தியா ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தவேண்டுமென ஆனந்த பத்மநாதன் சுட்டிக்காட்டியிருந்தார். இலங்கையில் 2009 முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட உள்நாட்டு நடவடிக்கைகளில் அரசும், விடுதலைப்புலிகளும் ஈடுபட்ட குற்றங்களின் சாட்சிகள் முன்வைக்கப்பட்டுள்ளது. சரியான வழிமுறையைக் கையாள்வதுடன் அனைத்துலக விசாரணை ஒன்றை ஏற்றுக்கொண்டு அதற்கு தமது ஒத்துழைப்பினை வழங்கவேண்டுமென இலங்கை அரசின் மீது இந்தியா தொடர்ந்து அழுத்தம்கொடுக்கவேண்டும் எனவும் இந்தியாவிற்கான அனைத்துலக மன்னிப்புச்சபையின் இயக்குனர் தெரிவித்திருந்தார்.

அதேநேரம் பிரபாகரனே நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றதாகக் கூறுவது வேடிக்கையானது. நாட்டின் சர்வாதிகார போக்குடனான ஆட்சியில் மக்கள் பாரிய துன்பங்களுக்கு மத்தியில் வாழ்க்கையை கொண்டு செல்கின்ற அதேவேளை, ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைத்து வரப்பிரசாதங்களையும் அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே இந்நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டு சென்றதாக கூறுவது வேடிக்கைக்குரிய விடயமாகும் என முன்னாள் இராணுவத் தளபதியும், ஜன நாயக கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வரசினால் எங்களுடைய போராட்டங்களை தடை செய்ய முடியாது. நாங்கள் எதற்கும் அஞ்சியவர்களில்லை. அரசாங்கம் எங்கள் மீது எவ்வகையில் தடை விதித்தாலும் நாங்கள் அப்பாவி மக்களுக்காக தொடர்ந்து போராடுவோம். அதேபோன்று எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் பெருமளவிலான வாக்குகளை பெற்று வெற்றிகொண்டு நாட்டின் முன்னணி கட்சியாக பரிணமிப்போம் எனவும் அவர் கூறினார். அரசுக்கு எதிராக ஜனநாயகக் கட்சி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், தற்போது இந்நாட்டை ஆட்சி செய்யும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியினால் ஊழல், மோசடி அதிகரித்துள்ளதுடன் கசினோ சூதாட்டத்தை கொண்டுவந்து கலாசாரத்தைசீரழிவுக்குள்தள்ளியுள்ளது. அதேபோன்று சர்வாதிகார போக்குடன் இந்நாடு ஆட்சி செய்யப்படுகின்றது. இவ்வரசின் சர்வாதிகார போக்கிற்கு இடமளிக்கக் கூடாது. இதேவேளை, தற்போது மக்களால் நிம்மதியாக வாழ்க்கையைகொண்டு செல்ல முடியாது. பல வருடங்களாக கொழும்பில் வாழும் மக்கள் சிறிய வீடுகளிலேயே வசித்து வருகின்றனர். அவர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய வீடுகளை அரசு வழங்காமல், அவர்களுடைய வீடுகளை உடைத்து அவ் இடங்களை அரசாங்கம் சுவிகரித்து வருகிறது. அத்துடன் இந்நாட்டு மக்கள் தொடர்பில் எவ்வித சிந்தனையும் அரசிற்கு கிடையாது .

கல்வி மற்றும் போக்குவரத்திற்கு போதியளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. இந்நிலையில் அரசாங்கம் பொய் வாக்குறுதிகளை வழங்கி பொய்மை மிகு ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையை மாற்றியுள்ளது. தற்போது மக்களுக்கு மூவேளைகள் சாப்பிட முடியாது. ஒரு வேளை உணவையே மூவேளையும் உண்ணுகின்றனர். நமது மூதாதையர்களை விடவும் உணவு உட்கொள்ள வழியின்றி மக்கள் தவிக்கின்றனர். இவ்வரசு ஐந்து தலைமுறையினரை கடனாளியாக மாற்றியுள்ளது. தற்போது அரசாங்கம் சர்வதேசத்தின் வல்லரசு நாடுகளுடன் நட்புறவை கொள்ளாமல் சர்வாதிகார ஆட்சிகளையுடைய நாடுகளுடனே நட்புறவு கொள்கிறது . இதனால் தற்போது நாடு பெரும் வலைக்குள் சிக்கியுள்ளது. இதேவேளை, பிரதான எதிர்க்கட்சிகள் மீது குற்றங்களை சுமத்தாமல் அரச ஊடகங்கள், ஜனநாயக கட்சியின் மீதே குற்றங்களை சுமத்திவருகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன்பு பிரபாகரனுடைய மயிரிழைக்கு கூட இவ்வாட்சியாளர்கள் தகுதியற்றவர்களென கூறியமைக்கு அரச ஊடகங்கள் என்னை தேசத்துரோகி என பெயர் சூட்டியுள்ளன. நான் மனச்சாட்சிக்கு உடன்படவே கூறுகிறேன் .

இந்நாட்டில்விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பொது மக்களை இலக்காக வைத்தே தாக்குதல்கள் மேற்கொண்டார். பிரபாகரன் இந்நாட்டை சீரழித்ததை விடவும் இவ்வரசாங்கம் மக்களை பெரும் கஷ்டத்திற்குள் தள்ளியுள்ளது.அத்துடன், 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பிரபாகரனுக்கு 500 மில்லியன் ரூபாவை வழங்கியது யார் ? இவ்வரசாங்கமாகும். தற்போது தீவிரவாதிகள் அனைவரும் அமைச்சரவையிலேயே உள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உபதலைமைப் பதவியை பயங்கரவாதிகளுக்கு வழங்கியது யார்? இவ்வரசாங்கமேயாகும். ஆகவே, இவ்வரசாங்கம் எங்களுக்கு எவ்வகையில் தடை விதித்தாலும் எங்களுடைய போராட்டங்களை நாம் நிறுத்தமாட்டோம். எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் பெருமளவில் வெற்றி பெற்று நாட்டின் முன்னணி கட்சியாக பரிணமிப்போம் என்றும் சரத்பொன்சேகா தெரிவித்திருந்தார்.

அவர் தற்பொழுது தன்னுடைய அரசியலை கொண்டுசெல்வதற்காக இவ்வாறான கருத்துக்களை முன்வைத்துவருகின்றார். இருப்பினும் சர்வதேச சமூகம் எப்படி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியது என்பது பற்றி பார்க்கின்றபொழுது, 2001-2005 ஆம் ஆண்டுகளில் சமாதான ஒப்பந்த காலப்பகுதிகளில் அமெரிக்காவின் திட்டம் விடுதலைப்புலிகளை முற்றாக அழித்தொழிக்கவேண்டும் என்பதாகும். அதற்கு மஹிந்த மட்டும் பொறுப்பல்ல. இனவழிப்பிற்கு பொறுப்பாக முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவும் உடந்தையாகின்றார். ஆனால் தற்பொழுது தாம் எதுவும் செய்யவில்லை என சர்வதேச மட்டத்தில் மஹிந்த அரசிற்கு எதிராக சாட்சியமளிக்க தயாரெனவும் கூறிவருகின்றார். யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றபொழுது களத்தின் நிலைமைகள் மோசமடையலாம் என விடுதலைப்புலிகளின் முன்னாள் இராணுவத்தளபதியாகவிருந்த கருணா அம்மான் கூறியிருந்தார். ஒரு வகையில் விடுதலைப்போராட்டத்தின் பின்னடைவிற்கு எட்டப்பராகவிருந்து செயற்பட்டவர் கருணா என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இவர் தமிழ் மக்களால் துரோகி என அழைக்கப்பட்டுவருகின்றார்.


சர்வதேச நாடுகள் குறிப்பாகச்சொல்லப்போனால் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பல நாடுகள் மஹிந்த அரசிற்கு உதவிகளை வழங்கின. குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் எவ்வாறான உதவிகளை வழங்கியிருந்தது. அமெரிக்கா துல்லியமாக ஒட்டுக்கேட்கும் தொலைத்தொடர்பு சாதனங்களையும், இந்தியா சட்டலைட் மூலம் இடங்களைக் கண்டறியக்கூடிய வகையிலான சாதனங்களையும், சீனா இரசாயன ஆயுதங்களையும், பாகிஸ்தான் போர்க்கப்பல்களையும் யுத்தகாலத்தின் போது இலங்கைக்கு வழங்கியிருந்தன.

இதைவிட 58 உலக நாடுகள் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் வகையில் தமது ஒத்தாசைகளை வழங்கியிருந்தன. இதே 58 நாடுகளும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும் வாக்களித்திருந்தன. 21ம் நூற்றாண்டின் துட்டகைமுனு என மஹிந்த ராஜபக்ஷ வர்ணிக்கப்படும் அதேநேரம், சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புக்கள் அவருக்கு மிகவும் கைகொடுத்தது. குறிப்பாகச் சொல்லப்போனால் இந்தியாவின் சோனியா காந்தியின் அரசாங்கம் பிரபாகரனை உயிருடன் பிடிப்பதை விட கொலைசெய்யவே உத்தரவிட்டிருந்தது. சோனியா அரசிற்கு விடுதலைப்புலிகள் வளர்ந்து வருவதனையும், தமது நாட்டு பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையையும் வைத்துக்கொண்டு தமிழ் மக்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் மீது பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதேநேரம் தற்பொழுது இந்தியாவில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியினைக் கைப்பற்றியிருக்கும் அதேநேரம், மஹிந்தவுடனான பேச்சுக்கள் நிறைவடைந்துள்ளதுடன், தற்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களும் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கொதிநிலையடைந்துள்ளார். இந்தியாவின் பா.ஜ.க அரசாங்கம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து மஹிந்தவிற்கு எதிரான நடவடிக்கைகளை திட்டம் தீட்டியிருப்பதாகவும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில், இவ்விடயம் இன்று மஹிந்த அரசிற்கு பெரும் தலையிடியாக அமைந்துள்ளது எனலாம்.

மறவன்

# தமிழீழமே தமிழ் மக்களுக்கான வழி, பிரபாகரன் கடைசிவரை தனது இலட்சியத்தில் இருந்து மாறவில்லை



**கடந்தவாரத் தொடர்ச்சி...**

இதில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை வழிநடத்தி வந்த தலைவர் பிரபாகரனுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் குறிப்பாக ராஜீவ் காந்திக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது முப்பத்தொராவது வயதில் தமிழீழம், புங்குடுதீவைச் சேர்ந்த மதிவதனி என்ற பெண்ணை 1984ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். ராஜீவ் காந்தியின் தலைமையில் இந்திய அரசு இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையை தன் விருப்பத்திற்கு ஏற்ப கையாளத் தொடங்கியதுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அழுத்தங்களைப் போட்டு, 1985இன் ஆரம்பத்திலிருந்தே தலைவர் பிரபாகரனின் தலைமையில் கெரில்லா நடவடிக்கைகளில் 1985 ஆனி 18இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்,' சிங்கள ஆயுதப் படைகளுக்கும் இடையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து அதே ஆண்டின் ஆடிமாத முற்பகுதியில் இந்திய அரசின் மத்தியஸ்துவத்தின் கீழ் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுக்கள் ஆரம்பமாயின. சகல தமிழ் குழுக்களும் கலந்து கொண்டன. தமிழர் தேசியம், தமிழர் தாயகம், தமிழர் தன்னாட்சி உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை மற்றைய தமிழ் குழுக்களும் ஏற்றுக்கொண்டன. ஆனால் இக் கோரிக்கையைச் சிங்கள அரசு நிராகரித்தது. இப்படியாகச் சிக்கலடைந்த திம்புப் பேச்சு வார்த்தைகள், போர் நிறுத்தத்தை மீறி சிங்களப்படைகள் திருகோணமலையிலும், வவுனியாவிலும் நடாத்தி முடித்த தமிழினப் படுகொலையில் 200 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து முறிவடைந்தன. இந்நேரத்தில் தமிழீழத்தில் தன் தளபதிகளுடன் தலைவர் பிரபாகரன் போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை பற்றிய நிலைப்பாடுகள் குறித்து கலந்துரையாடிக் கொண்டிருந்தார்.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார். இதனால் தலைவர் பிரபாகரனுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் பாரிய முரண்பாடும் இடைவெளியும் ஏற்பட்டது. ஆனால் இந்தியா பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தலைவர் பிரபாகரன் பின்வருமாறு கூறியிருக்கிறார். “எமக்கு இந்தியாவின் உதவியும் நல்லெண்ணமும் அவசியம். அதே வேளையில் இந்தியா தனது தீர்வைத் தமிழீழ மக்கள் மீது திணிப்பதை நாம் விரும்பவில்லை. தங்களது எதிர்காலத்தை தீர்மானிக்கும் முழு உரிமையும் எமது மக்களுக்கு உண்டு”என்றார்.

ஆனால் இந்திய அரசும், அதன் பிரதமரும் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களின் விடுதலையில் எவ்வளவு உறுதியாக இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளாமல் அப்போதைய தமிழக முதல்வருக்கு அழுத்தங்களைக் கொடுத்து, 1986ம் ஆண்டு ஐப்பசியில் தமிழக காவற்துறை மூலம் தமிழகத்தில் விடுதலைப்புலிகள் வைத்திருந்த தகவல் தொடர்புச் சாதனங்களைப் பறித்தார்கள். தலைவர் பிரபாகரனையும் மற்றைய போராளிகளையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று குற்றவாளிகளை நடத்துவது போன்று நடத்தினார்கள்.

**சாகும்வரையிலான உண்ணாவிரதம்**

இந்நிலையில் தலைவர் பிரபாகரன் என்ன செய்யப்போகிறார் என்பது ஒரு பெரும் கேள்விக்குறியாக இருந்தது. ஆயுதப் போராட்ட இயக்கத்தின் தளபதி, சிங்களப்படைகளின் சிம்மசொப்பனமான தலைவர் பிரபாகரன், அனைவரும் எதிர்பார்த்ததற்கு மாறாக தமிழகக் காவற்துறையினர் தங்களிடம் இருந்து பறித்த தகவல் தொடர்புச் சாதனங்களைத் திரும்பித்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நீர், ஆகாரம் இன்றி சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை 1986ம் ஆண்டு கார்த்திகை 22ம் நாள் தொடங்கினார். அவரின் இந்தச் செயல் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தது. தலைவர் பிரபாகரனின் மன உறுதியைப் புரிந்துகொண்ட இந்திய அரசு கோரிக்கையை ஏற்றுத் தகவல் தொடர்பு சாதனங்களைத் திருப்பிக் கொடுத்தது. உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. இவ் உண்ணாவிரதம் குறித்து அப்போது சில பத்திரிகையாளர்கள் தலைவர் பிரபாகரனிடம் வினாத்தொடுத்தார்கள்.

பத்திரிகையாளர்:- உங்களுடைய அகிம்சைப் போராட்டத்திற்கு வெற்றி கிடைத்திருக்கும் போது இலங்கையிலும் அகிம்சை முறையிலே போராடலாமே, ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய அவசியம் ஏன்? என்று கேட்டார்கள்.

பிரபாகரன்:-
உலகிலேயே தன்னுடைய சுதந்திரத்தைப் பெறுவதற்கு அகிம்சை முறையில் போராடி வெற்றி பெற்ற நாடு இந்தியா. எனவே அகிம்சைப் போராட்டத்தின் மகத்துவத்தைப் புரிந்திருக்கிற இந்தியாவில் எனது அகிம்சைப் போராட்டத்திற்கு வெற்றிகிடைத்திருக்கிறது. ஆனால் மனித நேயமற்ற இனவெறிச் சிங்கள அரசிடம் அகிம்சை முறை எடுபடாது. எனவேதான் தமிழீழத்தில் நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிறோம்” என்றார்.

**பெங்களூர் மாநாடு**

இதற்குப் பின் பெங்களூரில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள சிங்கள அரசின் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன வந்தபோது அவருடன் பேச்சுவார்த்தையில் கிழக்கு மாகாணத்தைத் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற ரீதியில் மூன்று பகுதிகளாகவும் பிரிக்கலாம் என்று ஜே.ஆர். ஜெயவர்த்தன சொன்னதாக தலைவர் பிரபாகரனிடம் இந்திய அரச தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தலைவர் பிரபாகரனோ “வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டாக இருப்பதனை ஒன்றாக இணைக்கவேண்டும் என்பதனை நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கும் போது, இரண்டை நாலாக கூறுபோடும் யோசனையை நாங்கள் எப்படி ஏற்கமுடியும்?” என்று கூறி நிராகரித்து விட்டார்.

அத்துடன் இந்த பெங்களூர் பேச்சுவார்த்தையில் தான், தலைவர் பிரபாகரனுக்கு முதல் அமைச்சர் பதவி தருவதாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்திய அரசுக்கூடாக தெரிவித்தார். இதற்கு தலைவர் பிரபாகரன் “இது ஒரு மாயவலை, தமிழ் இனத்தை அழிப்பதற்கு வேறு வகையாகப் பின்னப்பட்ட சதிவலை. அதிகாரங்கள் எதுவுமற்ற, நினைத்தால் ஜனாதிபதியால் கலைக்கக் கூடிய மக்களுக்கு எந்தவித நன்மையும் செய்யமுடியாத பொம்மைப் பதவிதான் முதல் மந்திரிப் பதவி” என்று கூறி அதனைத் தூக்கி எறிந்துவிட்டார்.

**தமிழீழம் திரும்புதல்**

தமிழ் நாட்டில் இருக்கும் வரை தனக்கு மத்திய மாநில அரசுகளின் நிர்ப்பந்தம் இருந்து கொண்டேயிருக்கும். இந்திய அரசுடன் பேசவரும்போது டில்லியிலோ அல்லது சென்னையிலோ தன்னைக் கொலை செய்து தமிழீழப் போரை அழிக்க முயற்சிக்கலாம். மொத்தத்தில்தமிழ்நாட்டில்இருக்கும்வரை ஆபத்து நீடிக்கவே செய்யும். எனவே தமிழீழம் திரும்பிச் செல்வதன் மூலம் விடுதலைப் போர் மேலும் வலுவடையும் என்ற உறுதியான முடிவில் தலைவர் பிரபாகரன் 1987ம் ஆண்டு தை 03ம் நாள் தமிழீழம் திரும்பினார்.

தலைவர் பிரபாகரன் தமிழீழம் திரும்பியதனை அறிந்த இலங்கை அரசும், அதன் படைகளும் கலக்கம் அடைந்த வேளையில், இந்திய அரசும் அதன் உளவுப்படையும் குழப்பம் அடைந்தன. இனி எவ்விதம் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையில் தலையிடுவது என்று குழம்பிய நிலையில் இலங்கைப் படைகளின் சில மூர்க்கமான இராணுவ நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக ஒத்துழைத்து அதன்மூலம் தமிழீழ மக்களுக்கு ஏற்படும் பாரிய அழிவுகளில் இருந்து அவர்களை மீட்கும் “இரட்சகர்” என்ற போர்வையில் தமிழீழத்தில் தன் இராணுவத் தலையீட்டை மேற்கொள்ளலாம் எனத்திட்டமிட்டு இந்தியரசு செயற்பட்டது.

1987 வைகாசி 1ம் நாள் உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களுக்கு ஆற்றிய உரையில், “நாம் போராடி, இரத்தம் சிந்தி, எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். எமக்கு வேறு வழியே இல்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழிய வேண்டும் அல்லது போராடிச் சுதந்திரமாக வாழ வேண்டும். இதுதான் எமது அரசியல் தலைவிதி. இன்று இந்தத் தொழிலாளர் தினத்தில் நாம் ஒரு உறுதி செய்து கொள்வோம். அதாவது சுதந்திர தமிழீழ தனி அரசுதான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு. இறுதியான தீர்வு. இந்தத் தனி அரசை அமைக்க நாம் எமது உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம். இது எமது தொழிலாளர் தினப் பிரகடனமாக அமையட்டும்” என்றார்.

**தமிழீழத்தில் இந்தியாவின் நேரடி இராணுவத் தலையீடு**

1987ம் ஆண்டு ஆடி 24ம் நாள் இந்திய அதிகாரிகள் சிலர் தலைவர் பிரபாகரனை யாழ்ப்பாணத்தில் சந்தித்து ‘இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்தி உங்களைச் சந்தித்து முக்கியமான விடயமாகப் பேசவிரும்புவதாக’ கூறித் தலைவர் பிரபாகரனை டில்லிக்கு அழைத்து செல்ல முயன்றார்கள், அவசரப்படுத்தினார்கள். இந்நிலையில் தமிழீழ மக்களுக்கு தலைவர் பிரபாகரன் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் ‘இன்றுதமிழ்மக்கள்தங்கள்இலட்சியத்தை வென்று எடுக்கும் ஒரு தலைமையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றேன். நீங்கள் எனக்கு அளித்துவரும் பொறுப்புக்களை நான் நேர்மையாகவும், உண்மையாகவும் உறுதியுடனும் செய்வேன் என நம்புகின்றேன். தற்காலத்தில் காணப்படும் இடைக்கால தீர்வுகள் எமது பிரச்சினையின் தீர்வாக அமையாது. எனவே தமிழ் மக்களின் நிரந்தரமான, நிம்மதியான, சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நிரந்தர தீர்வுக்காகவே நான் பாடுபடுகின்றேன். இத் தீர்வு தமிழீழம் என்றே நான் நம்புகிறேன். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட அழைப்பின் பேரிலேயே நான் தமிழீழத்தைவிட்டு உத்தியோக பூர்வமாக இந்தியா செல்கின்றேன்' என்று கூறிவிட்டு இந்திய அரசு அனுப்பி இருந்த இராணுவ ஹெலிகொப்டரில் டில்லிக்கு புறப்பட்டார். போகும் வழியில் தமிழகத்தின் முதலமைச்சர் எம்.ஜி. ஆரை சந்தித்துப் பேசினார். அப்போதும் எதற்காக இந்த அவசர அழைப்பு என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. டில்லி சென்ற தலைவர் பிரபாகரனையும். அவரது ஆலோசகர்களையும் ‘அசோகா ஹோட்டலில்’ தங்க வைத்தனர்.

இந்தியாவின் இலங்கைக்கான தூதுவர் தீட்சித், இந்திய வெளிநாட்டுத்துறைச் செயலாளர் மேனன் உட்படப் பல அதிகாரிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து இந்தியாவும், இலங்கையும் செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தம் பற்றி முதன்முதலாகத் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் தலைவர் பிரபாகரன் அதிர்ச்சி அடைந்தார். ஒப்பந்தத்தின் பிரதிகளை அவரிடம் கொடுத்துவிட்டு உடனே திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். இந்த ஒப்பந்தத்தினை ஏற்கமுடியாதுஎன்றுதலைவர் பிரபாகரன் மறுத்தார். தலைவர் பிரபாகரனை சம்மதிக்க வைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தலைவர் பிரபாகரன் உறுதியாக ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார். இந்தியப் பிரதமர் சந்திக்க விரும்புவதாக கூறி அழைத்துச் சென்றவர்கள், பிரதமரும் தலைவர் பிரபாகரனும் சந்திக்க ஏற்பாடு செய்யவில்லை. இடையில் நான்கு நாட்கள் பறந்தோடின. தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார் என்பது திட்டவட்டமாகத் தெரிந்ததும் தமிழகத்தில் இருந்த இந்தியாவின் அடிவருடிகளான மற்றைய தமிழ் குழுக்களின் பிரதிநிதிகள் டில்லிக்கு அழைத்து வரப்பட்டனர். சொல்லி வைத்தபடியே ஒப்பந்தத்திற்குச் சம்மதம் தெரிவித்தார்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்தார். யார் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஆடி 29ம் நாள் கொழும்பு செல்லப் போவதாகவும் அறிக்கை விட்டார்.

இதற்குப் பின்னர் தலைவர் பிரபாகரனை இந்தியப் பிரதமர் சந்தித்தார். அப்போது தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்திலுள்ள பலகுறைகளைச் சுட்டிக் காட்டினார். ஆனால் தலைவர் பிரபாகரன் இந்த ஒப்பந்தத்திற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டதாகப் பொய்யான செய்திகள் இந்திய அதிகாரிகளால் தொடர்பு சாதனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. உடனே தலைவர் பிரபாகரன் அதை மறுத்து அறிக்கை வெளியிட்டார். தலைவர் பிரபாகரன் தங்கியிருந்த அசோகா ஹோட்டலைச் சுற்றி ‘கறுப்புப் பூனைகள்’ என்ற இந்திய கொமாண்டோப் படைப்பிரிவினர் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்.

**இந்திய – இலங்கை ஒப்பந்தம்**

1987ம் ஆண்டு ஆடி மாதம் 29ம் நாள் தமிழீழ மக்களின் ஒப்புதல் இன்றி, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒப்புதல் இன்றி, தமிழீழ மக்களின் விடுதலையே தன் உயிர்மூச்சு என்று சொல்லி தமிழீழ விடுதலைப் போரை வழிநடத்திச் செல்லும் தலைவர் பிரபாகரனின் ஒப்புதல் இன்றி அவரை டில்லியில் ஹோட்டலில் பூட்டி வைத்துவிட்டு, பிராந்திய வல்லரசு என்ற இறுமாப்புடன் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைப் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் இந்தியாவின் பூகோள நலனுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

தொடரும்...

சுழியோடி

# உலகப் போராட்ட வரலாற்றில் BOX சமர்கள நாயகன் – தளபதி பால்ராஜ்

சென்றவாரத்தொடர்ச்சி...

படகுகளில் அணிகள் நகர்வதை தாளையடி முகாமிலிருந்த இராணுவம்ராடரில் அவதானித்து கடற்படைக்குத் தகவல் வழங்கியது. தரையிறக்க அணிகளின் படகுகளை தாக்குவதற்கு கடற்படையின் டோறா படகுகள் முயற்சியெடுக்க, கடற்புலிகளின் சண்டைப்படகுகள் தளபதி சூசை தலைமையில் கடற்தாக்குதலை ஆரம்பித்தனர். இதனால் தரையிறக்கச் சண்டை நடுக்கடலிலேயே ஆரம்பமானது. கடற்புலிகள் தாக்குதலை மேற்கொண்டு டோறாக்களை தடுத்து வைத்திருக்க, முதலாவது தரையிறக்க அணி தளபதி



பால்ராஜ் அவர்களுடன் தரையிறங்கியது. முதலில் தரையிறங்கியவர்கள் அங்கிருந்த மினிமுகாம் ஒன்றையும் தகர்த்து, தங்களது இலக்கு இடங்களை நோக்கி முன்னேறினர்.

தரையிறங்கிய இடத்தில் கடுமையான எறிகணைத் தாக்குதல்களை எதிரி நடாத்திய போதும் விநியோகப்பாதையை தடுக்கும் மூலோபாய நகர்வை சரியாக மேற்கொண்டு, இத்தாவிலில் கண்டிவீதியை மறித்து கிட்டத்தட்ட ஒரு சதுரக்கிலோ மீற்றர் பரப்பளவை உள்ளடக்கி நிலையமைத்திருந்தனர். பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து அணிகளையும், ஆயுதங்களையும் நிலைப்படுத்தினர். போராளிகள் சண்டையில் நிற்கின்றோம் என்பதை விட தயார்படுத்தல் பயிற்சி செய்வதைப்போல தங்களை தயார்ப்படுத்தினர்.

பால்ராஜ் தலைமையில் படையணிகள் கண்டி வீதியை ஊடறுத்து நிற்கின்றன என்பது சிங்களப் படைத்தலைமைக்கு வியப்பை ஏற்படுத்தியது. ஏனெனில் கனரகப்பீரங்கி, ஆட்லறி, பல்குழல் பீரங்கி, விமானப்படை, ராங்கிகள், துருப்புக்காவிகள், பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் மூன்றுபக்கமும் சுற்றி நிற்க அதற்கு நடுவே சாதகமில்லாத தரையமைப்பிற்குள் முக்கியமாக, நீரேரியால் பிரிக்கப்படும் ஒரு சிறு நிலப்பரப்பிற்குள் புலியணிகள் நிலைகொண்டதும் அதற்குள் பால்ராஜ் நிற்கின்றார் என்பதும் சிங்களப்படைக்கு அதிர்ச்சிக்குரிய விடயமாகவும், மனோதிடத்தை பலவீனப்படுத்தும் விடயமாகவும் இருந்தது.

1998ம் ஆண்டு கிளிநொச்சியில் ஊடறுத்து நின்ற பால்ராஜ் அவர்களின் மறிப்பை உடைக்க முடியாததன் விளைவே கிளிநொச்சி முகாமின் வீழ்ச்சிக்கான அடிப்படை என்பதை நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனால் பால்ராஜின் அணிகள் முழுமையாக நிலைபெறுவதற்கு முன் அவர்களை அழித்தொழிக்க வேண்டும் அல்லது அப்புறப்படுத்த வேண்டும் என்பது அவர்களிற்கு பிரதான விடயமாகியது. சிங்களத்தலைமை ஆச்சரியத்துடன் பார்க்க, இரண்டில் ஒன்று பார்த்துவிடுவம் என்று புலியணிகள் தயாராகி நிற்க, இத்தாவில் சண்டைக்களத்தில் புதிய வீர வரலாற்றைப் பதிய ஆயத்தமாகினர்.

இத்தாவில் பெட்டிச்சமரை ஸ்ராலின்கிராட் சண்டையுடன் ஒப்பிடலாமா? அல்லது நோமன்டித் தரையிறக்கத்துடன் ஒப்பிடலாமா? என்றால் அந்த களச்சூழலைத் தாண்டி இத்தாவில் பெட்டிச்சமர் தனித்துவமாகவே தெரியும். சாத்தியமில்லாத தரையமைப்பில் குறைந்தளவிலான வளங்களுடன், குறிப்பிட்டளவு போராளிகளையும் வைத்துக்கொண்டு 40,000 சிங்களப்படைகளின் நடுவே, அதி நவீன ஆயுதங்கள், முப்படைகளின் தாராளமான உதவிகள், சர்வதேச இராணுவ வல்லுனர்களின் ஆலோசனைகள், தொழில்நுட்ப உதவிகள் போன்றவற்றை தன்னகத்தே கொண்ட படையினரை ஊடறுத்து நிற்பது என்பது புலிகளுக்கு மட்டுமே இருந்த அல்லது தமிழர்களுக்கு இருக்கும் மனோபலத்தின் வெளிப்பாடு.

பால்ராஜ் அவர்களிடம் பலவருடங்களாகத் தோல்வியைச் சந்தித்த சிங்களத் தளபதிகள் பலரும் அந்த களமுனையின் தளபதிகளாக இருந்ததால், பால்ராஜ் அவர்களை வெற்றிகொண்டு பழிதீர்க்க கிடைத்த ஒரு சந்தர்ப்பம் என்ற மன உணர்விலும் சிங்களப் படைத்தலைமை தீவிரமான எதிர்த்தாக்குதலை முன்னெடுக்கத் திட்டமிட்டது. தனது தளபதிகளிடம் கதைக்கும் போது “என்னட்ட அடிவாங்கி ஓடினவைதான் இப்ப ஒன்றாய்ச் சேர்ந்து வந்திருக்கினம். இவையள் இந்தமுறையும் வெல்லிறதைப் பார்ப்பம்” என்று பால்ராஜ் கூறினார். இத்தாவிலில் உருவாக்கப்பட்ட போர்வியூகத்தை உடைப்பதற்காகவும், கண்டிவீதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவும் கடுமையாகப் போரிட்டது சிங்களப்படை. உக்கிரமான சமர். எதிரி புலிகளின் நிலைகளை உடைப்பதும், அதை புலிகள் மீளக் கைப்பற்றுவதுமாக, நீண்ட நேரமாக தக்கவைப்பதற்காகவும், கைப்பற்றுவதற்கானதுமான சண்டைகள் நடைபெற்றன.

அர்ப்பணிப்பும், உறுதியும் நிறைந்த போராளிகளின் செயல்வீரம், அவர்களின் தீவிரமான போரிடும் ஆற்றல், மெய்சிலிர்க்க வைக்கும் தியாகங்கள், நிலைகளை விடாமல் தனித்து நின்று சமரிட்ட பண்பு, அவர்கள் வெளிப்படுத்திய துணிச்சலான செயற்பாடுகள் இத்தாவில் பெட்டியை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது. கிட்டத்தட்ட பத்திற்கு மேற்பட்ட பெரியளவிலான படையெடுப்புக்கள், பதினைந்திற்கும் மேற்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் என முப்பத்துநான்கு நாட்களாகக் கடுமையான பல சண்டைகளை எதிர்கொண்டது புலிகள் சேனை.

பொதுவாகவே இராணுவம் காலைவேளைகளில்தான் தனது தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடங்கும். ஒரு தடவை காலை இராணுவம் தனது நகர்வை செய்யவில்லை. எனவே களமுனைத் தளபதிகளுடன் சண்டை தொடர்பாகக் கதைக்கத் தீர்மானித்த தளபதி மதியமளவில் களமுனைத் தளபதிகளை தனது கட்டளைமையத்திற்கு அழைத்திருந்தார். அவர்களுடன் கதைத்துக்கொண்டிருந்த வேளை (தொலைத்தொடர்பு கன்காணிப்பின் மூலம் எல்லோரும் கட்டளைமையத்தில் இருக்கின்றனர் என அறிந்து) சிங்களப்படை நீரேரிக்கரையால் திடீர் ஊடறுப்புத் தாக்குதலை மேற்கொண்டு பால்ராஜ் அவர்களின் கட்டளைமையத்திற்கு அருகில், கிட்டத்தட்ட 25 மீற்றரில் அமைந்திருந்த கட்டளை மையத்திற்கான பாதுகாப்பு நிலையில் சண்டையைத் தொடங்கினர்.

அதிலிருந்து 75 மீற்றரில் ராங்கிகள், பவள் கவசவாகனங்கள், துருப்புக்காவிகள் கட்டளை மையத்தைத் தாண்டி சென்று கொண்டிருந்தன. இராணுவத்தால் “வெலிகதற” எனப் பெயரிடப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கையானது, இத்தாவில் பக்க கண்டல் நீரேரிக்கரையால் ஊடறுத்து ஒட்டுமொத்த தரைத்தொடர்பையும் துண்டித்து, நிலைகொண்டிருக்கும் அணிகளை அழிக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

கட்டளைமையத்தில் பாதுகாப்பிற்கு நின்றவர்கள் இராணுவத்தைக் கண்டு சண்டையைத் தொடங்கி, நிலமையை புரிந்து சுதாகரித்த தளபதி நிதானமாக களமுனைத் தளபதிகளை அவரவர் இடங்களுக்குச் செல்லுமாறு கூறிவிட்டு, தனக்கருகில் சண்டை நடக்கின்றது என்பதைப்பற்றி அலட்டிக்கொள்ளாமல், அங்கு நடந்த சண்டையையும் எதிரி ஊடறுத்து வந்த இடங்களை மீளக்கைப்பற்றுவதற்கான கட்டளைகளையும் எந்தவித பதட்டமும் இல்லாமல் வழங்கிக் கொண்டிருந்தார். இராணுவம் ஊடறுத்து வந்த பகுதியில் விடுபட்ட நிலைகளைத் தவிர ஏனைய நிலைகளைத் தக்கவைத்து அங்கிருந்து தொடர்ச்சியாக தாக்குதலை மேற்கொண்டனர். ஆர்.பி.ஜி கொமாண்டோஸ் அணிகள் சிங்களப்படையின் துருப்புக்காவிகள், ராங்கிகள் மீது தாக்குதலை நடாத்தினர். ஒரு ராங்கி அழிக்கப்பட்டதுடன் பல ராங்கிகள் சேதமாக்கப்பட்டன.

இரண்டு பவள் கவசவாகனங்கள் கைப்பற்றப்பட்டன. உள்நகர்ந்த எதிரியை அழிக்க வகுத்த உடனடித் திட்டத்தில் எதிரி நகர்ந்த இடங்களிலெல்லாம் தாக்குதலுக்குள்ளானதால் திணறிய எதிரி செய்வதறியாது திரும்பியும் போக முடியாமல் திண்டாடினர். இதில் நடந்த தற்துணிவான சம்பவங்கள் பல. உதாரணமாக சண்டையிட்டுக்கொண்டிருந்தபோது ரவை முடிந்துபோய் இருந்த பெண் போராளியின் நிலைக்குள் பாய்ந்து கொண்டார் ஒரு சிப்பாய். அவரது துவக்கையே பறித்து அவரைசுட்டுவீழ்த்தினார் அந்தப்போராளி. அதுபோல ரவை முடிந்ததும் செல்லால் அடித்து ஒரு எதிரியை வீழ்த்தினார் இன்னுமொரு பெண்போராளி. இதுபோல பல சம்பவங்கள் இந்த சண்டைக்களத்தில் நடைபெற்றன. பிறிதொரு சம்பவத்தில், ராங்கிகள் வந்தபோது அவற்றின் மீது குண்டு வீசி அழித்த பெண்புலிகளின் வீரம் என்பது புறநானூறுக்குப் பின் தமிழ்ப்பெண்களின் வீரத்திற்கான எடுத்துக்காட்டு.

இறுதியாக இருட்டு வேளையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பாரிய இழப்புடன் பின்வாங்கியது இராணுவம். எப்போதும் போராளிகளின் உளவுணர்வை தனது உறுதியான கட்டளை மூலம் தெம்பாக வைத்திருப்பது பால்ராஜ் அவர்களின் குண இயல்பு. ஒரு பெண்போராளி ஒரு பகுதிக்கான தாக்குதலை வழிநடாத்திக் கொண்டிருந்தார். நீண்ட நேரமாக இறுக்கமாக சண்டை தொடர்ந்து கொண்டிருந்தபோது தொடர்பு கொண்ட தளபதி “எங்கட கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் எதிரி நினைக்கிறதை அடைய விடக்கூடாது. வந்த எதிரிகளுக்கு நாங்கள் யார் எண்டதைக் காட்டிப்போட்டு விடவேணும்” என்று கூறினார்.

அப்போராளிகளும் கடுமையாகச் சண்டையிட்டு இராணுவத்தை பலத்த இழப்புகளுடன் பின்வாங்கச் செய்தனர். மற்றும் சண்டைக்கான கட்டளையை வழங்கும் சமநேரத்தில் விநியோகம் சரியாக செல்கின்றதா? காயம் மற்றும் வீரச்சாவடைந்தவர்களை அனுப்புதல் உட்பட களத்தின் சகல ஒழுங்குபடுத்தல்களையும் கவனித்துக்கொண்டிருப்பார். இலங்கையின் முப்படைத்தளபதிகளும் பலாலியில் இருந்து இத்தாவில் முற்றுகைச் சின்னாபின்னமாக்க நினைத்தபோதும் அது அவர்களால் முடியாத காரியமாகவே இருந்தது.

இந்நடவடிக்கையில் இலங்கை இராணுவத்தின் பெருமைமிக்க தளபதிகளான பிரிகேடியர் காமினி கொட்டியாராச்சி, வான்நகர்வு பிரிகேட் கட்டளைத்தளபதி கேணல் றொசான் சில்வா, மேஜர். ஜெனரல் சிசிற விஜயசூரிய உட்பட பல தளபதிகளின் சண்டைத்திட்டங்கள், தந்திரோபாயங்கள் எல்லாம் தவிடுபொடியாக்கப்பட்டன. இறுதியாக ஒரு தடவை பாரிய நடவடிக்கை ஒன்றை திட்டமிட்டு, பால்ராஜ் அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவே கைப்பற்றுவோம் எனக் கங்கணங்கட்டி மேற்கொள்ளப்பட்ட பாரிய நடவடிக்கை கூட தோல்வியில் முடிந்தது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியின் பிரதான பங்கை வகித்த பால்ராஜ் அவர்களின் சேனையை வெற்றி கொள்ள இலங்கை இராணுவத்தின் அனைத்து சிறப்புப் படையணிகளும் பயன்படுத்தப்பட்டன. ஆனால், அச்சேனையை அவர்கள் வெல்லமுடியாததால் ஆனையிறவுத்தளம் பெரும் சிக்கலுக்குள்ளாகியது. தொடர்ந்து சண்டையை கொண்டு நடாத்த முடியாத நிலைமைஏற்பட்டதுடன் மறுபக்கம்தளபதி தீபன் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட நகர்வையும் தடுக்கமுடியாததால் நெருக்கடிக்குள்ளான இராணுவத்திற்குப் பின்வாங்கி ஓடுவதைத்தவிர வேறுவழி இருக்கவில்லை.

இத்தாக்குதல் நடவடிக்கையின் கடினத்தை தளபதி பால்ராஜ் விபரிக்கும் போது “சண்டையென்றால் இதுதான் சண்டை. குளிக்க ஏலாது. சப்ளை இல்லை. வெட்டி நிற்கும் பங்கருக்குள்தான் சாப்பாடு. தூக்கம் எல்லாமே. வீரச்சாவடைந்தவர்களை வீரவணக்கம் செலுத்தி விதைக்க வேண்டும். காயப்பட்ட போராளிகளை அதே பங்கருக்குள் பராமரிக்கவேண்டும். விமானம், ராங்கி, எறிகணை என அப்பிரதேசத்தை துடைச்சு எடுப்பான். அந்தப்பகுதிக்குள்ளிருந்த சிறு மரங்கூட காயமில்லாமல் இருக்காது அந்தளவிற்கு கடுமையான செல்லடி. சண்டையும் அப்படித்தான். இன்று 400 மீற்றர் அவன் பிடிச்சா, நாளைக்கு 600 மீற்றர நாங்கள் பிடிப்பம். 10, 20 ராங்கிகளை இறுமிக்கொண்டு நகர்ந்து சண்டை நிலைகளுக்குள்ளேயே புதைக்கலாமென்று வருவான். நாங்கள் ஆர்.பி.ஜியால அடிப்பம். சில இடங்களில் ராங்கை வரவிட்டு நாங்கள் பாய்ந்து குண்டு போட்டு அழிப்பம். சப்ளை துப்பரவாக இல்லாத சமயங்களில ஆமியின்ர ஆயுதங்களை எடுத்து சண்டையிடுவம்.

மேலதிக படையணிகள் கிடைக்காத தருணங்களில் 100 மீற்றர், 200 மீற்றர் சில இடங்களில் 500 மீற்றருக்கு விடக்கூடிய அளவு போராளிகளே இருந்தனர். இவ்வாறு விட்டு விட்டு தொடர் ரோந்துகளை விட்டே எதிரியை உள்ள விடாம பாப்பம். சிலநேரங்களில ரோந்து அணியுடன் சண்டை தொடங்கும். உடனே பக்கத்திலிருக்கின்ற அணிகளை எடுத்து உடனடித்தாக்குதலை மேற்கொண்டு துரத்திவிடுவம். எதிரிக்கு நாங்கள் பலர் இருப்பது போன்ற பிரம்மையை ஏற்படுத்தியதால் எங்களின் படைபலத்தை மிகையாகக் கணிப்பிட்டு நகர்வதற்குப் பயப்பட்டான் எதிரி” என்று கூறுவார். பால்ராஜ் அவர்களிற்கு நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களின் தாக்கம் கடுமையாக இருந்தபோதும் அதை அக்கறைப்படுத்தாமல் அந்த நோயின் வலியையும் சமாளித்துக் கொண்டே இத்தாவில் சண்டையை 34 நாட்கள் வெற்றிகரமாக நடாத்திக் காட்டினார்.

தொடரும்...

ஹெற்றிப்பொறியன்

# பிராந்தியச் செய்திகள்

## சட்டவிரோத அழகு சிகிச்சை நிலையங்கள் கண்டுபிடிப்பு



நுகர்வோர் சட்டத்தை மீறும் வகையில் நடத்தப்பட்டு வந்த சட்டவிரோத அழகு சிகிச்சை நிலையங்கள் சுற்றவளைக்கப்பட்டு அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாவனைக்கு உதவாத மற்றும் தரமற்ற பொருட்களைப் பயன்படுத்தும் அழகு சிகிச்சை நிலையங்கள் தொடர்பில் கடந்த ஒரு மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டக்களப்பு நபருக்கு யாழில் வாள் வெட்டு



யாழ் கோட்டைப் பகுதியில் மாலை இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்தனர். மட்டக்களப்பைச் சேர்ந்த சண்முகம் சிவதாசன், வயது 30, ராசா விதுசன் வயது 20 ஆகியோரே இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்கானவர்களாவர். இவர்களில் ஒருவர் தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்தவராவார். கோட்டைப் பகுதியில் இவர்கள் இருவரும் நின்றிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இவர்களைத் துரத்தித் துரத்தி வெட்டியதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கலாச்சாரச் சீரழிவுகளும், விபச்சார நடவடிக்கைகளும் அதிகரித்துக் காணப்பட்ட நிலையிலே இந்த வாள் வெட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலைகள் வரிசையில் இலங்கை முன்னணி

உலகில் அதிகளவு தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணி வகிக்கின்றது. 172 நாடுகளில் ஆய்வு நடத்தப்பட்டு உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. உலகில் அதிகளவு தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காம் இடத்தை வகிக்கின்றது. உலகில் அதிகளவு தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் கயானா முதலாம் இடத்தை வகிக்கின்றது. கயனாவில் 100,000 பேரில் 44.2 பேர் தற்கொலை செய்துகொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் இரண்டாம் மூன்றாம் இடங்களை வகிக்கின்றன. வடகொரியாவில் ஒரு லட்சம் பேரில் பேரில் 38.5 பேர் தற்கொலை செய்து தொள்வதாகவும் தென்கொரியாவில் தென் கொரியாவில் ஒரு இலட்சம் பேரில் 28.9 பேர் தற்கொலை செய்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் ஒரு இலட்சம் பேரில் 28.8 பேர் தற்கொலை செய்து கொள்வதாகக் குறிப்பிடப்படுகிறது. உலகின் மிக முக்கியமான சுகாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாக தற்கொலைகள் மாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நஞ்சு அருந்துதல், தூக்கிடுதல் மற்றும் துப்பாக்கிச் சூடு போன்ற வழிகளின் மூலம் அதிகளவில் தற்கொலைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. உலகில் அதிகளவில் தற்கொலை செய்து கொள்வோர் ஆண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விடுதலைப்புலிகளின் வீரத் தளபதிகளும், இராணுவ உயர் அதிகாரிகளும்

கடந்தவாரத் தொடர்ச்சி...

முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இரசாயன ஆயுதத்தை வைத்திருந்தார்கள் என்று இராணுவம் கூறியிருந்தாலும் இவற்றை ஏன் பயன்படுத்தவில்லை என்பதில் சந்தேகம் தோன்றுகின்றது. தமிழீழவிடுதலைப்புலிகள் 1990ம் ஆண்டே யாழ்ப்பாணம் கோட்டையைத் தாக்கியபோது அவர்கள் உருவாக்கிய பசிலன் செல் 2000 என்ற குண்டைப் பயன்படுத்தியிருந்தனர். அக்குண்டின் அதிர்வால் கோட்டையிலிருந்த இராணுவம் தாமாகவே புறப்பட்டு மண்டைதீவுக்கு சென்றது. இதனால் கோட்டை புலிகளின் வசமானது. அக்காலத்திலிருந்தே தமிழீழவிடுதலைப்புலிகள் குண்டுகள் மற்றும் ஆயுதங்களைத் தயாரிப்பதில் தலைசிறந்து விளங்கினர்.

விடுதலைப்புலிகள் தயாரித்த நீர்மூழ்கிக் கப்பல்கள், டோராப் படகுகள், தன்னியக்கத்துப்பாக்கிகள் என்பனவும் தற்போது முல்லைத்தீவில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. ஆயுத உற்பத்தியிலும் அனைத்து கட்டமைப்புக்களிலும் தாம் சிறந்தவர்கள் என்பதைக் காட்டுவதாகவே இவ்விடயம் அமைந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் இராணுவத் தரப்பினரிடம்கூட இப்படியான ஆயுதங்கள் இல்லை. இராணுவம் பயன்படுத்தியது மல்ரி பெரல்கள் மாத்திரமே நவீனமானது என்று குறிப்பிடலாம். கொத்துக்குண்டை பாவித்ததாக் மன்னார் ஆயர் அடித்துக் கூறியிருந்தார்.

இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரசுக்கு அதிநவீன சட்டலைட் தொழிநுட்பங்கள், மற்றும் கொத்துக்குண்டுகள், உளவறியும் விமானங்கள் என்பனவற்றை வழங்கியிருந்தன என்பது அக்காலகட்டத்தில் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருந்தது. தற்கொலைப்படையை பிரபாகரன் வைத்திருந்த காரணத்தால் எல்.ரி.ரி.ஈ அமைப்பினர் உலகநாடுகளால் ஓரங்கட்டப்பட்டது மட்டுமல்லாது பிரபாகரனின் தலைமைத்துவமும் மறுக்கப்பட்டு இன்று பிரபாகரன் அல்லாத தலைவர் ஒருவரை உருவாக்கி தமிழ்மக்களுக்கான சமஷ்டி ஆட்சியை உருவாக்குவதில் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே போன்ற நாடுகள் முயற்சித்து வருகின்றன. அதனொரு கட்டமாகவே நடைபெற்ற சர்வதேச நாடுகளின் மனிதஉரிமை மகாநாடுகள் அமையப்பெறுகிறது. விடுதலைப்புலிகள் ஒரு நாட்டின் கட்டமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு ஏற்ப தம்மை பலப்படுத்தி வைத்திருந்தனர். பிரபாகரன் நினைத்திருந்தால் அதிநவீன சக்திவாய்ந்த குண்டுகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்தியிருக்கலாம்.

தொடரும்...

## காணாமல் போன சிறுவன் சடலமாக மீட்பு



லிந்துலை மட்டுக்கலை பகுதியில் காணாமல் போன சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுகலை தோட்டத்தைச் சேர்ந்த யோகநாதன் சிவதர்ஷன் என்ற சிறுவனைக் காணவில்லை என, கடந்த 04ம் திகதி இரவு 11.00 மணியளவில், பெற்றோர் லிந்துலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையில் குறித்த சிறுவன் காலை தலவாக்கலை மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தில் சடலமாக மிதந்து கொண்டிருப்பது தெரியவந்துள்ளது. அத்தோடு லிந்துலை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தும் பொதுமக்களால் சடலத்தை கண்டுபிடிக்கும் வரை லிந்துலை பொலிஸார் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என கோரி பொதுமக்களால் காலை 9 மணி முதல் தற்போது வரை தலவாக்கலை நகரசபைக்கு முன்னால் ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர். இதனால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

குறித்த சடலம் நீதவானின் மரண விசாரணைக்காக அதே இடத்தில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இந்த மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்ற விசாரணைகளையும் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



## எரிக்சொல்ஹெயம் தமிழ் மக்களுக்கும். LTTE யினருக்கும் செய்தது வரலாற்றுத் துரோகம். (தொடர்ச்சி)

நோர்வேயை நம்பி சமாதானப் பேச்சுவார்த்தைக்குச்சென்றபலமான ஒரு விடுதலை அமைப்பின் கட்டுமானங்கள் கண்முன்னாலேயே சர்வதேச நாடுகளின் அனுசரணையுடன் சிங்களப் படைகளால் துவம்சம் செய்யப்பட்டபோது நோர்வேத் தூதுவர் அதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. நம்பி நின்ற மக்கள் கண்முன்னாலேயே அழிக்கப்பட்ட போதும், சிங்களப் படைகளால்கொன்றுகுவிக்கப்பட்ட போதும் அதனைத் தடுத்து நிறுத்த அனுசரணையாளர் என்ற போர்வையிலிருந்த நோர்வே நடவடிக்கை எடுக்கவில்லை. இத்தனை வரலாற்றுத் தவறுகளையும் தங்களிடம் வைத்துக்கொண்டு புலிகளைக் குற்றஞ்சாட்டுவதில் அர்த்தமில்லையென்பதை நோர்வேயும், எரிக்சொல்ஹெய்ம் அவர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

மற்றவர்களை நோக்கி உங்கள் கைகளை நீட்டுவதற்கு முன் உங்கள் கைகள் சுத்தமானவையா என்பதை முதலில் பார்க்க வேண்டும். இவ்விடயத்தில் தமிழ் மக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் வல்லரசுகள், வளமான நாடுகள் என்பதற்காக அவர்கள் சொல்கின்ற எல்லாவற்றையும் செவிமடுக்க வேண்டுமென்ற தேவை தமிழ் மக்களுக்கு இல்லை. தமிழ் மக்கள், குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும்.

அமெரிக்காவின் அன்பு முகம் நோர்வே. அமெரிக்காவின் கோர முகம் இஸ்ரேல்' இது தமிழீழத் தேசியத் தலைவரின் கூற்று. இந்த வசனத்தின் தீர்க்க தரிசனத்தையும், யதார்த்தத்தையும் தமிழ் மக்கள் தற்போது உணர்ந்துகொண்டிருக்கின்றனர். தமிழீழத் தேசியத் தலைவர் எது செய்தாலும், எதைச் சொன்னாலும் அதன் பின்னால் மிகப் பெரும் அர்த்தம் இருக்கும். அந்த அர்த்தத்தை எல்லோராலும் இலகுவில் புரிந்துகொள்ள முடியாது. காலம் சென்ற பின்னரே சிலவற்றைப் புரிந்துகொள்ள முடியும்.

தலைவர் கூறியது போல அமெரிக்காவின் அன்பு முகத்தை நோர்வேயின் இலங்கைக்கான சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தற்போது வெளிப்படுத்தியிருக்கிறார். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை அழிக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடனேயே நோர்வே தமிழர் தாயகத்திற்கு வந்து அமைதி நாடகமாடியது என்ற உண்மையை தற்போது நோர்வே தூதுவரே அம்பலப்படுத்தியிருக்கிறார்.

அண்மையில் பி.பி.சி சர்வதேச ஊடகத்திற்கு ஒரு செவ்வி வழங்கிய எரிக் சொல்ஹெய்ம், போரின் இறுதியில் வன்னியில் இடம்பெற்ற மனிதப் பேரவலத்தைத் தடுப்பதற்கு சர்வதேசத்திடம் திட்டமொன்று இருந்ததாகவும்தமிழீழவிடுதலைப்புலிகள் அதற்குச் சம்மதிக்கவில்லையென்றும் தெரிவித்திருக்கிறார். இந்தச் செவ்வியை சொல்ஹெய்ம் வழங்கியதன் முக்கிய காரணம் கடந்த காலங்களை ஞாபகப்படுத்துவதற்காகவோ அல்லது கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்களை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவோ அல்ல. மாறாக தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்கின்ற தமிழ் மக்களை குழப்புவதற்காகவே இந்தச் செவ்வி திட்டமிட்டு தயார்படுத்தப்பட்டிருக்கிறது. யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில் சொல்ஹெய்ம் பல ஊடகங்களுக்கு செவ்வியளித்திருக்கிறார். ஆனால், மேற்படி காரணத்தை அவர் எங்கேயும் சொல்லியதில்லை.

தற்போது அவர் ஏன் கூறுகிறார் என்றால் போரின் அழிவுக்கு புலிகள் தான் காரணமென்று கூறவேண்டிய தேவை அமெரிக்காவிற்கு ஏற்பட்டிருக்கிறது. யாரை வைத்து இதனைச் சொன்னால் தமிழ் மக்களிடமும், சர்வதேசத்திடமும் இந்தக் கருத்து எடுபடும் என்றால் எரிக் சொல்ஹெய்ம் தான் அதற்குப் பொருத்தமானவர் என்று கருதிய அமெரிக்கா அவரைக் கொண்டு தற்போது புலிகளை மீண்டுமொரு தடவை குற்றஞ்சாட்டியிருக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் போன்ற ஒரு விடுதலை அமைப்பை உலகில் எந்த நாட்டிலுமே எவரும் கண்டுகொள்ள முடியாது. விடுதலைப் புலிகளைப் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட ஒருபோராட்ட அமைப்புஇனிமேல்உலகில் வேறெங்கும் தோற்றம் பெறமுடியாது.

விடுதலைப் புலிகளுக்கு நிகர் புலிகள் தான். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தனியே ஒரு ஆயுதம் தாங்கிய அமைப்பு அல்ல.

தொடரும்...




## அனிருத் கேட்ட சம்பளத்தால் அலறி ஓடிய உதயநிதி



உதயநிதி நண்பேண்டா படத்தில் தற்போது பிஸியாக நடித்து கொண்டிருக்கிறார். இப்படத்திற்கு பிறகு என்றென்றும் புன்னகை படத்தை இயக்கிய அஹமத் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்திற்கு ஏற்கனவே ஹன்சிகாவை கதாநாயகியாக ஒப்பந்தம் செய்தனர். மேலும் அனிருத்தை தான் இசையமைப்பாளராக கமிட் செய்து வைத்திருந்தனர்.

ஆனால் தற்போது அனிருத் மார்க்கெட் பற்றிநாங்கள்சொல்லிதெரியவேண்டியது இல்லை. முன்பே கமிட் செய்திருந்தாலும் இவர் ரூ 2 கோடி சம்பளமாக கேட்க, உதயநிதி அதிர்ந்து விட்டாராம். பின்பு ஒரு வழியாக பேசி ரூ 1 1/2 கோடிக்கு முடித்துள்ளதாக கூறப்படுகிறது.


## ஜீவா ரசிகர்களுக்கு ஒரு குட் நியூஸ்



ஜீவா கடைசியாக ஹீரோவாக நடித்து வெளிவந்த திரைப்படம் என்றென்றும் புன்னகை. இப்படத்திற்கு பிறகு விஜயின் ஜில்லா படத்தில் ஒரு பாடலுக்கு மட்டும் தலைகாட்டிவிட்டுப் பறந்தார். அதன் பிறகு ஒளிப்பதிவாளர் ரவி.கே.சந்திரன் இயக்குனராக அறிமுகமாகும் யான் படத்தில் நடித்தார் ஜீவா.

இப்படத்தின் படப்பிடிப்பு வேலைகள் கிட்டத்தட்ட 2 மாதங்களுக்கு முன்பே முடிந்துவிட்டது. ஆனாலும் படத்தின் ரிலீஸ் திகதியை பற்றி இதுவரை அறிவிக்கவில்லை. தற்போது இப்படத்தின் ரிலீஸ் வேலைகள் மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறதாம். விரைவில் யான் படத்தின் முழு நீள டிரைலரை வெளியிட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


## இயக்குனர்கள் மீது நடிகர் பாய்ச்சல்



விருமாண்டி, சுள்ளான், வெடிகுண்டு முருகேசன், குசேலன் என பலவேறு படங்களில் நடித்திருப்பவர் பசுபதி. இப்போது இவர் மொசக்குட்டி என்ற புதிய படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை பற்றி இயக்குனர் என். ஜீவன் கூறுகையில், மைனா, சாட்டை போன்ற படங்களை தயாரித்த ஜோன் மேக்ஸ் இப்படத்தை தயாரிக்கிறார்.

பசுபதி இந்த படத்தில் உப்புதர காசி என்ற கதாபாத்திரத்தில் நடிக்கிறார். அவரிடம் சென்று கதை சொன்னேன். கேட்டு முடித்ததும், 'எல்லோரும் கதை நல்லா சொல்றாங்க ஆனா சொன்ன மாதிரி எடுக்க மாட்டேங்குறாங்க என்று ஒரு சில இயக்குனர் மீது புகார் கூறினார். அதே போல என்னையும் சொல்லிவிடுவாரோ என்று பயந்தேன். ஆனால் முதல் நாள் ஷூட்டிங் முடிந்தது, பரவாயில்லை சொன்னதைவிட நல்லாவேஎடுக்கிறீர்கள் என்று கூறினார்.

## பொலிவூட் நடிகை தூக்குப்போட்டு தற்கொலை



தி ஹொன்ட் ஹவுஸ் என்ற பொலிவுட் படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் மோனா கன்னா. ஆனால் இந்தபடம் இன்னும் திரைக்கு வரவில்லை, அதற்குள் தூக்குப்போட்டு இறந்துவிட்டார். இது குறித்து பொலிஸார் விசாரணையில் அவர் எழுதிய கடிதம் கிடைத்தது. இதில் 'என் மரணத்திற்கும் யாரும் காரணம் இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதை முற்றிலுமாக மறுத்த அவரது தங்கைஎனஅக்காபிரபலநடிகரின்மகனை காதலித்து வந்தார், அவர் ஏமாற்றியதால் தான் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று கூறியுள்ளார். தற்போது அந்த காதலன் யார், மரணத்திற்கு அவர் தான் காரணமா? என்று பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


## வரிசையாக தோல்வியை சந்திக்கும் சமந்தா



தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகையாக திகழ்ந்து வருபவர் சமந்தா. அங்கு சமந்தா நடித்த படங்கள் தொடர்ச்சியாக செம ஹிட். அதே போல் தமிழிலும் ஒரு நல்ல இடத்தை தக்க வைக்க அடுத்தடுத்து சூர்யா, விஜய், விக்ரம் என முன்னணி நாயகர்களின் படங்களில் ஒப்பந்தம் ஆனார். சமீபத்தில் சமந்தா சூர்யாவுடன் நடித்த அஞ்சான் படம் வெளிவந்து அடுத்த வாரத்திற்குள்ளேயே வசூல் அடங்கி விட்டது. ஆனால் படக்குழுவினர் படம் செம ஹிட் என்று கூறிவருகின்றனர்.

இந்நிலையில், தெலுங்கின் முன்னணி நடிகர் என்.டி.ஆருடன் ரபாசா என்ற படத்தில் நடித்து வந்தார் சமந்தா. தெலுங்கில் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருந்த சமந்தாவுக்கு இப்படம் கைகொடுக்கவில்லை. இத்தனைக்கும் ரபாசா படத்தில் சமந்தா கிளாமராக நடித்திருந்தாராம். இதனால் அஞ்சான் படத்தில் நடித்த ராசியோ என்னவோ சமந்தாவுக்கு ரபாசா படம் தோல்வியடைந்து விட்டது என்று சினிமா வட்டாரங்கள் கூறிவருகின்றனர்.

## அஜித் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தவர் கைது



அஜித் அமைதியாக இருந்தாலும் சிலர் அவரை தொந்தரவு செய்து கொண்டே தான் இருக்கின்றனர். சில நாட்களுக்கு முன் அஜித் வீட்டில் வெடிகுண்டு இருப்பதாக ஒரு மர்ம ஆசாமி 108க்கு போன் செய்துள்ளார்.

இதை தொடர்ந்து அவரது வீட்டின் முன்பு பொலிஸார் குவிக்கப்பட்டனர். மேலும் மிரட்டல் விடுத்த அந்த மர்ம நபரையும் சீக்கிரம் கண்டு பிடிப்போம் என காவல்துறை கூறியது. அவர்கள் கூறியது போலவே மிரட்டல் ஆசாமி கைது செய்யப்பட்டுள்ளார். ஏன் இவர் இப்படி செய்தார் என்ற தகவல்கள் விசாரணையில் தான் தெரிய வரும் என்று கூறியுள்ளனர்.

## யுனிட்டை அசர வைத்த பிருத்திவிராஜ்



மோகன்லால்-மம்மூட்டிக்கு பிறகு மலையாள சினிமாவின் முன்னணி நடிகராக இருப்பவர் ப்ருத்திவிராஜ். சினிமாவில் நடிக்க வந்து 12 ஆண்டுகளில் 80 படங்களில் நடித்து விட்ட அவர், தற்போது கிட்டத்தட்ட 10 படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். அந்த வகையில் வருடத்திற்கு 7 முதல் 8 படங்கள் வரை முடித்து வருகிறார் ப்ருத்திவிராஜ்.

இந்த நிலையில், ஓணம் பண்டிகைக்கு ப்ருத்திவிராஜின் நடிப்பில் சப்தமஸ்ரீ தஸ்கரா என்ற படம் திரைக்கு வருகிறது. ஆசிப் அலியும் இன்னொரு நாயகனாக நடித்துள்ள இந்த படத்தில் ரீனு மேத்யூஸ் நாயகியாக நடித்திருக்கிறார். ஏற்கனவே ஹீரோ என்ற படத்தில் ஸ்டன்ட் மாஸ்டர் வேடத்தில் நடித்த ப்ருத்திவிராஜ் அப்போது சண்டை பயிற்சியின் அனைத்து வித்தைகளையும் திறம்பட பயிற்சி எடுத்த பிறகே அந்த கதாபாத்திரத்தில் நடித்தாராம்.

## 80 வருட சினிமா சாதனையை முறியடித்தார் த்ரிஷா



தமிழ் சினிமாவில் பத்து வருடங்களுக்கு மேலாக முன்னணி நடிகையாக இருப்பவர் நடிகை த்ரிஷா. இவர் முதன்முறையாக பவர் என்ற படத்தின் மூலம் கன்னடத் திரையுலகில் அறிமுகமானார். முன்னணி நடிகரான புனித் ராஜ்குமார் ஜோடியாக த்ரிஷா அறிமுகமான இப்படம் பல சாதனைகளைப் புரிந்து வருகிறது.


275 திரையரங்குகளுக்கும் மேல் வெளியான 'பவர்' படம் மூன்று நாட்களுக்குள்ளாகவே சுமார் 7 கோடி ரூபாவை வசூல் செய்துள்ளது. 80 வருட கன்னட சினிமா வரலாற்றில் மிகப் பெரிய ஓபனிங் கிடைத்த படம்என்ற சாதனையை 'பவர்' திரைப்படம் புரிந்திருக்கிறதாம். முதலிரண்டு நாள் வசூலை விட மூன்றாம் நாள் வசூல்தான் அதிகமாக இருந்ததாம். இதுவும் ஒரு சாதனை என்கிறார்கள். ஒரு நாளைக்கு 1060 காட்சிகள் கர்நாடக மாநிலம் முழுவதும் திரையிடப்படுகிறதாம். இந்த படத்தின் வெற்றி மூலம் த்ரிஷாவிற்கு அங்கு பலத்த வரவேற்பு கிடைத்துள்ளதாம்.

## உத்தமவில்லன் படப்பிடிப்பு இன்னும் முடியவில்லையாம்




கமல், விஸ்வரூபம் படம் வெளியான பிறகு அதன் இரண்டாம் பாகத்தில் நடித்தார். அந்த படமே இன்னும் வெளியாகாத நிலையில், உத்தமவில்லனில் நடிக்கத் தொடங்கினார் கமல். ஆனால் இப்போது அந்த படமும் இன்னும் முடிவடையாத நிலையில், த்ருஷ்யம் ரீமேக்கான பாபநாசம் படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். இதற்கு என்ன காரணம்? என்று விசாரித்தபோது, விஸ்வரூபம்-2 படப்பிடிப்பு முடிந்தபோதும் போஸ்ட் புரொடக்ஷன்ஸ் வேலைகள் இன்னும் முடியவில்லையாம். ஏற்கனவே அந்த படத்தை தயாரிக்கும் ஒஸ்கர் பட நிறுவனம் 150 கோடி பட்ஜெட்டில் ஐ படத்தையும் தயாரித்திருப்பதோடு, அப்படத்தை தீபாவளிக்கு வெளியிடும் வேலைகளிலும் ஈடுபட்டிருப்பதால், விஸ்வரூப வேலைகள் தற்காலிகமாக பேக் அடித்துள்ளதாம்.


அதோடு, லிங்குசாமி தயாரித்து வந்த உத்தமவில்லன் படப்பிடிப்பு அதிக வேகத்துடன் நடந்து வந்தபோதும், அஞ்சான் படம் கொடுத்த நஷ்டம் காரணமாக, உத்தமவில்லன் படப்பிடிப்புக்கு சில சிக்கல்கள் ஏற்பட்டதாம். அதனால்தான் யோசித்துப்பார்த்த கமல், இவர்கள் ரெடியாகி வரும் வரை காத்திருக்க வேண்டாம் என்று தனக்காக படப்பிடிப்புக்கு செல்ல காத்துக்கொண்டிருந்த பாபநாசம் படத்தில் நடிக்கத் தொடங்கி விட்டாராம். ஆக, கமல் நடித்துள்ள விஸ்வரூபம்-2, உத்தமவில்லன், பாபநாசம் இந்த மூன்றில் எந்த படம் முதலில் திரைக்கு வரும் என்பது புதிராக உள்ளது.


பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 690682



# கவிதைப் பூங்கா



## முடிவற்ற காதல்

ஆழமான உன் அன்புக்குள்
அடைக்கலமானவள்
சோகங்கள் மறந்து இதயத்துக்குள்
உன்னைச் சுமப்பவள்

அவள் காதலன் நீ - ஆனால்
உன் காதலி அவள்தானா?
வார்த்தைகளால் பகிரப்படாததால்
அவளுக்கு இப்படியும் சந்தேகம்

உள்ளங்கள் காதலிக்கின்றன - ஆனால்
உரிமையுடன் பேசமுடியவில்லையே
சொல்லாமலேயே இக்காதல்
தொலைந்து போய்விடுமா?

இல்லை இறுதிவரை இல்லை - பிரிவை
நினைத்துப் பார்க்கவே முடியவில்லை
முடிவுவரை இணைந்த காதலராய்
முடிவின்றி தொடர்ந்து காதலியுங்கள்

வந்தனா
கிளிநொச்சி

## தேடல்

உன்னைப் பார்ப்பதற்காய்
உள்ளம் ஏங்குகிறது
கண்கள் திசை எல்லாம்
உன்னைத் தேடுகின்றன
சொன்னால் கூட
கண்களும், இதயமும் - என்
கட்டுப்பாட்டை மீறி
உன்னையே தேடுகின்றன
சில நாட்களில்
அவற்றின் தேடுதல்களுக்குள்
நீ அகப்படுவாய் - அன்று
அவைக்கு இன்பமான நாள்தான்
பல நாட்கள் - உன்னைப்
பார்த்துப் பார்த்தே
இதயமும் கண்களும்
சோர்ந்து போய் விடுகின்றன
தேடித் தேடிப் பார்க்கின்றேன்
என் அன்பே
என்னைத் தவிக்கவிடாது
தினமும் எனக்கு தரிசனம் கொடுப்பாயா!

S.குகா
கிளிநொச்சி

## சிறை பிடிக்க முடியுமா?

மூச்சுக்காற்றை
சிறை பிடிக்க முடியுமா
என்று என்னிடம்
சவால் விட்டாள்!
எப்படி முயன்றும்
"என்னால் முடியவில்லை அன்பே"
என்று தோல்வி சிறையில்
அடைபட்டுக் கொண்டேன்!
சிரித்துக் கொண்டே
அவளுடைய மூச்சுக்காற்றை
காற்றடைக்கும் தலையணையில்
சிறை பிடித்தாள்
என் செல்ல மகள்

## அடங்காத ஆசைகள்

என்னோடு நீ பேசவேண்டும்
என் ஆசைகளை
நீ - கேட்க வேண்டும்
உன் விழிகள்
என்னைப்பார்த்து
ரசிக்க வேண்டும் - இந்த
குமரிப்பெண்ணின் உள்ளத்தில்
மலர்ந்திருக்கும்
மலர்கள் மீது
வண்டாக - நீ வந்து
வட்டமிட வேண்டும்
எனது கைகளால்
தொட்டு தளுவவேண்டும்
என் - இதயத்தின் மீது
உன் இதயத்தை
பதிவைத்து பார்
என் அன்பை எடுத்துக்கொண்டு
உன் அன்பை தந்துவிடு
என் ஆசைக்கவிதைகளை
உன் - இருவிழிகளால்
என் திருமேனியில் வாசித்துப்பார்
அடங்கிவிடும்
உன் ஆசைகள்
அலையாக - மீண்டும்
எழும்பிவரும்
அடங்காத - என் ஆசைகள்

வீ.அருள்ராஜா
வவுனிக்குளம்

## தாயின் மடி!

காதைப் பிளக்கும்
பீரங்கி குண்டுச் சத்தம்
ஒற்றையாய் விழுந்து
கற்றையாய் உயிர்களைக் கொல்லும்
கொத்துக் குண்டுகள்
உயிரினை உரசிச் செல்லும்
எமகாதக தோட்டாக்கள்
என அத்தனை எமன்களையும் தாண்டி
நாட்டைக் காக்க முன்னேறுகிறேன்
எதிரில்படும் எதிரிகளை
துவம்சம் செய்தபடி
எங்கிருந்தோ வந்த குண்டு
என் இதயத்தைத் தாக்க
இரத்தத்தை இறைத்தபடி
தாய் மண்ணில் மடிகிறேன்
மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு...
அது தாய் மண் என்பதால் அல்ல
அது நான் பிறந்த தாயின் மடி என்பதால்..!

உன் இளமைக்குள்
கேட்கும்
முகாரி ராகங்கள்
இப்போதும்
என் நெஞ்சை
சோதனையில்
ஆழ்த்துகிறது

## மாணவ முத்துக்களே!

நாங்கள்
விடிகாலை
பத்திரிகை பார்த்த
போது
எங்கள்
இதயத்தை
கிழித்துக்கொண்டு
இறங்கியது
இடி

உங்கள்
சோகத்தில்
எங்கள் விழிகள்
வேகமாய்
அச்சிட
தொடங்கியது
கண்ணீர்
பிரதிகளை...!

வரட்சியில்
கிணற்றில் நீர்
வற்றிப்போய்
விட்டால்
குளித்தில்
குளிக்கப்போக
இடிந்து போனது
உங்கள் வாழ்க்கை
கிணறுகள்...!

யுத்தம்
மீண்டும் தொடங்கி
உறவுகள் அழியக்
கூடாது என்று
நாங்கள்
தவம் செய்ய
உங்களை பலியெடுத்தது
தண்ணீர்...!

எப்போதும்
மாணவர்களின்
மரணம் நாட்டை
ஆளும் தலைவர்களின்
மரணம்

ஒரு நாட்டின்
எதிர்காலம்
காப்பாற்றப்படுவது
மாணவர்களால் தான்

நீங்களும்
நாட்டை ஆளும்
வருங்கால தூண்கள்

உங்கள் வாழ்க்கை
சிறுகதை போல
முடிந்திருக்கிறதே
இது பெரிய
சோகக் கதை

உங்களை பற்றி
பெற்றோர்கள்
மட்டுமல்ல
தேச மக்களும்
கண்ட கனவுகளின்
மீதும் மண்ணள்ளி
போட்டிருக்கிறது மரணம்

அன்புத் தங்கையர்
நவதாரணி நிசாந்தினி
செல்வம்
தாட்சாயினி
நீங்கள் சாய்ந்து
போன கோபுரங்கள்
அல்ல


மாறாக
நிலத்தில் இறங்கி
வேர் ஊன்றி வாழும்
ஆழ விழுதுகள்

உங்கள்
மூச்சடங்கி
போயிருக்கிறதே தவிர
ஒருபோதும்
உங்கள் பேச்சடங்கி
போகாது
மண்ணில்...!

உயிரோவியன்



# புனைகதைப் புயல்



தொடர் - 69

# முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி

அம்மா அவனை நண்பன் வீட்டுக்கு சென்று பொருட்களை எடுத்து வருமாறு கூறியது தாம் வீட்டுக்கு பிந்தி போவதற்கு சந்தர்ப்பமாக அமைந்தது என்பது அவனுக்கு மிக சந்தோசமாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த வேண்டும் என்று நினைத்தவன், மோட்டார் சைக்கிளை குளிரகம் ஒன்றினுள் திருப்பினான்.

"ஏன் இஞ்சை"

"மோட்டச்சைக்கிலுக்கு பெற்ரோல் அடிக்க"

"ஏன் எனக்கு போட் வாசிக்கத்தெரியாதே..."

முதுகில் நுள்ளினாள்.

"பின்ன... கூல்பாறுக்கை ஏன் போறியள் எண்டு கேட்டால் நான் என்ன சொல்லுறது."

"அது தெரியும் இந்தநேரம் ஏன், வீட்டை போக வேணும் இருண்டு போச்சு பேந்து மாமி...."

"அம்மா பேச மட்டா... அவவுக்கு சொல்லீட்டன்."

"என்ன இஞ்சை என்னை கூட்டி போறன் எண்டோ."

பதட்டத்துடன் கேட்டாள்.

"இல்லை வீட்டை பிந்தி போறதுக்கு."

"ஏன்...."

"கிட்ட ஓருடத்தை ஒரு பார்சல் வந்திருக்கு, அதை எடுத்துக்கொண்டு வாறன் நேரம் செல்லும் எண்டு சொல்லீட்டன்."

"அப்பிடி பொய் சொல்லிப்போட்டு இஞ்சை கூட்டி வாறியள்.. கடும் ஆள்தான்."

"உங்களுக்கு விருப்பமில்லை எண்டால்... போவம்."

"இல்லை நான் சும்மா சொன்னனான்..."

முதுகில் தோள்மூட்டினால் இடித்து செல்லங்கொட்டினாள்.

"சரி வாங்க உங்கட விருப்பம் போல சாப்பிடுங்க... வெக்கப்படக்கூடாது."

"இம்... இப்பிடி இருக்கிற இடத்துக்கே இப்பதான் முதன்முதலாய் வாறன் பாப்பம் நீங்க பக்கத்தில இருப்பீங்க தானே."

"கூட்டி வந்தது விட்டுட்டு போகவே. பக்கத்தில இராம யாருக்குப்பக்கத்தில இருக்கிறது."

"அங்க அதில ஒண்டிருக்குது... அதுக்கு பக்கத்தில இருங்கோ சுப்பராயிருக்கும். சோடி தரம்."

அங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்த வெள்ளைக்காரியை காட்டினாள்.

"ஏன் நான் நல்லாயிருக்கிறது பிடிக்கேல்லையோ."

அவனும் பதிலுக்கு கூறினான்.

"ஏன் நல்லம்தானே உடுப்பு வாங்கிற செலவில்லை... அங்க அதைமாதிரி ரண்டு வாங்கினா மாறி மாறி ரண்டு பேரும் போடலாம்....."

என்று கூறி அவன்மீது மோதிச்சிரித்தவள் அவனது கையை பிடித்தபடி நடந்தாள்.

"எவடத்தை இருப்பம்..."

மின் விளக்குகளால் செய்யப்பட்டிருந்த அலங்காரங்கள் கண்ணைப் பறித்தன. எங்கும் அழகிய கதிரைகள் மேசைகள் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருந்தன. சனக்கூட்டம் குறைவாக இருந்தாலும் ஆங்காங்கு கூட்டமாக இருந்து மகிழ்வாக உரையாடியபடி சிற்றுண்டிகளை உண்டு குளிர்பானங்களை அருந்திக்கொண்டிருந்தனர். பெரும்பாலும் இளம் ஜோடிகளாக இருந்தனர்.

காதலர்களாக இருக்கலாம் அல்லது அண்மையில் திருமணம் முடித்தவர்களாக இருக்கலாம் என நினைத்தாள். ஆயினும் அவர்களின் முகங்களை அவதானித்தவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. சிலருடைய நெற்றியில் கறுத்தப்பொட்டு இருந்தது. சிலருக்கு பொட்டே இருக்கவில்லை. அப்படியே பிராக்குப்பார்த்தவாறு நடந்தவளை...

"இதில இருப்பம்..." என்ற ராமின் குரல் நிறுத்தியது. "இம்..."

என்று தலையசைத்தவள் அவன் அமர்ந்தபின் நெருக்கமாக கதிரையை போட்டு அமர்ந்து கொண்டாள். அங்கேயும் 'மொடேன்' ஆடையில் அழகு காட்டியபடி நங்கையரும், இளைஞர்களும் உணவு பரிமாறுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அருகில் வந்த ஒருவன்..

"உங்களுக்கு என்ன தர.... குடிக்க...சாப்பிட சோட்டிஸ்...? தட்டு வைக்கவா?"

அவன் கேட்டதும் ராம் அவளைப்பார்த்தான்.

"உங்களுக்கு பிடிச்சதையே சொல்லுங்க..." என்றாள்..

"தம்பி சோட்டீஸ் தாங்க..."

என்று கூற அவன் வேகமாக சென்றான். அவன் போன பின் அவளைப்பார்த்து...

"என்ன 'பெசலா'...அல்லது... 'நட்ஸ்'... ஏதாவது சொல்லட்டே..."

"பெசல்' வேண்டாம்...." என்றாள் சட்டென...

"அப்ப நட்ஸ் நல்லது...."

என்றான். ஆனால் 'நட்ஸ்' நல்லது என்பதற்காக 'பெசல்' வேண்டாம் என்று கூறவில்லை. அவள் 'பெசல்' வேண்டாம் எண்டதற்கான காரணம் வேறு. முன்பு படித்துக்



கொண்டிருந்த காலத்தில் ஒரு பெரிய குளிரகம் இருந்தது. கூடப்படிக்கும் மாணவிகள் தாங்கள் அங்கு போய் 'ஐஸ்கிறீம்' குடித்ததாக அடிக்கடி கூறுவார்கள். அதனால் அவளுக்கு அங்கு தானும் போக வேண்டும் என்ற ஆசை. ஆனால் அதற்கான சந்தர்ப்பம் இருக்கவில்லை.

வீட்டிலும்கூட்டிச்சென்றுவருவதற்கு யாரும் இல்லை. அப்பா அம்மாவிற்கு இப்படியான ஆடம்பரங்கள் சரி வராது. கதையோடு கதையாக அப்பாவிடம் ஒருதடவை கேட்டபோது....

"தங்கச்சியை கூட்டிக்கொண்டு போய் குடிச்சிட்டு வா..."

என்று கூறி, மனைவியிடம் காசு கொடுக்கும்படி கூறினார். காசு இருந்தாலும் தனியாக போய் வர வெட்கம். இதனால் போகும் ஆசையை கை விட்டிருந்தாள். பின்னர் ஒரு தடவைசித்தப்பாவவுனியாவிலிருந்து வந்திருந்த சமயம் குடும்பமாக போகும் சந்தர்ப்பம் கிடைத்தது.

எல்லோருமாக மகிழ்வுடன் புறப்பட்டு அங்கு போன போது ஏற்பட்ட அனுபவம் தான் அவளுக்கு 'பெசல்' எண்டவுடன் வேண்டாம் என்று கூறச்செய்தது. எல்லாம் நன்றாகத்தான் இருந்தது. அளவுக்கு அதிகமாக இருந்ததால் எல்லோராலும்முழுமையாகசாப்பிட முடியவில்லை. ஆசையினால் ஆரம்பத்தில் சாப்பிட்டு விட்டாள்.

வீட்டுக்கு வந்தபின் சமிபாடடையாமல் வயிற்றைப்பிரட்டி, தலையிடித்து, சத்தியெடுத்தது, இதனால் பட்ட அவஸ்தை அவளுக்கு 'பெசல்' என்றாலே வெறுக்குமளவு ஆகிவிட்டது. அதற்குப்பின்னர் இவள் ஏதாவது தீன்பண்டங்கள் கேட்டால், "'பெசல்' குடிச்சமாதிரியோ அப்பிடியெண்டால் அப்பிடியே ஆஸ்பத்திரிக்கு போட்டு வாங்கோ... பிறகு என்னாலை ஆஸ்பத்திரிக்கு கொண்டு ஓட ஏலாது..."

என்று கிண்டல் செய்வார். சிற்றுண்டித்தட்டு வைத்ததும் மீண்டும் அவன்...

"குடிக்க என்ன..." என்று கேட்க...

"நட்ஸ்... ரெண்டு..." என்று கூறிவிட்டு..

"என்ன பாத்துக் கொண்டிருக்கிறியள் சாப்பிடுங்கோ."

என்றான். "இம்....நீங்க....எடுங்க..."

என்று கூறி ஒரு 'றோளை' எடுத்தாள். அவன் சிறிய 'டிஸ்சில்' 'சோஸ்' போத்தலை எடுத்து அளவாக விட்டுவிட்டு தானும் 'றோளை' எடுத்து சாப்பிடத் தொடங்கினான்.

அவள் தானும் 'சோசில்' தொட்டு சாப்பிட்டாள். அவன் அருகில் இருப்பது மகிழ்வாக இருந்தாலும் வைத்தியசாலையில் அவன் நடந்து கொண்ட விதம் அவளுக்கு முற்றாகவே பிடிக்கவில்லை. எப்படியாவது அதை கண்டிக்கவேண்டும் என நினைத்தவள். ஏதோ கூற திரும்பினாள். ஆனால் அவன் முந்திக்கொண்டான்...

**அவள் வருவாள்...**



# ஆன்மீக உலகம்



## ஆன்மீகத் தகவல்கள்



விநாயகப்பெருமானின் பெரு வயிறு இந்தப் பிரபஞ்சம் முழுவதும் இறைவனுக்குள் அடக்கம் என்பதை உணர்த்தும் அறிய தத்துவமாகும்.

சிவன் சந்நிதியில் பிரதட்சணம் செய்யும்போது நந்திதேவரையும்சேர்த்தே பிரதட்சணம் செய்தல் வேண்டும். அதைவிடுத்து சிவனுக்கும், நந்திக்கும் இடையே சென்று கோவிலைச் சுற்றி வருதல் கூடாது.

பூஜை பொருட்களை சில்வர் தட்டுகளில் வைக்கக்கூடாது. வெள்ளி, பித்தளை, செம்பு, வெண்கலம் ஆகிய தட்டுகளிலேயே வைக்க வேண்டும்.

பசுவின் உடலெல்லாம் பாலாக இருப்பினும் அதைகறந்துவெளிப்படுத்தும் இடம் அதன் மடிதான். அதுபோலபகவான் அருளைச் சுரக்கும் இடம் ஆலயமாகும். எனவே திருக்கோவில்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவதால நம் வினைகள் யாவும் வெந்து எரிந்து நீராகி நம் விருப்பங்கள் நிறைவேறுகின்றன.

சிதம்பரத்தைத் தரிசித்தாலும், காசியில் இறந்தாலும், திருவாரூரில் பிறந்தாலும், திருவண்ணாமலையை நினைத்தாலும் மோட்சம் கிட்டும் என்பது ஆன்றோர் முடிவு.

விநாயகனை ஒருமுறை வலம் வரவேண்டும். சிவபிரானை மூன்று முறையும், அம்பாளை நான்கு முறையும், முருகனை மூன்று முறையும் சுற்றி பிரதட்சணம் செய்தல் வேண்டும்.

காலையில் படுக்கையில் இருந்து கண் விழித்தெழுந்ததும் அவரவர் உள்ளங்கையில் கண் விழிப்பதே நற் பலன்களை நல்கும் என்பது இந்து தர்ம சாஸ்திரம் கூறும் நெறி.

வீடுகளில் மணியடித்து பூஜை செய்து விட்டு அந்த மணியைத் தரையின் மேல் வைக்கக்கூடாது. ஏதாவதொரு அடுக்குப் பகுதியின் மேல் வைக்க வேண்டும்.

## நபிமொழிகள்



நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
அல்லாஹ் மறுமை நாளில் எனக்காக நேசம்வைத்துக் கொண்டவர்கள் எங்கே? என்னுடைய நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத இந்நாளில் நான் அவர்களுக்கு எனது நிழலைத் தருகிறேன் என்று கூறுவான்.
அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)
நூல்: முஸ்லிம் (4655)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
மக்களே! நான் உங்களிடம் இரண்டு விஷயங்களை விட்டுச்செல்கின்றேன். அதைப் பற்றிப் பிடித்திருக்கும் காலமெல்லாம் ஒருபோதும் வழி தவறமாட்டீர்கள்.
1. அல்லாஹ்வின் வேதம் 2. அவனது தூதரின் வழிமுறை ' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி)
நூல்: ஹாகிம் 318

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"அல்லாஹ்வின் சார்பாக நான் ஒரு கருத்தைக் கூறினால் அதைக் கடைப்பிடியுங்கள். ஏனெனில் அல்லாஹ்வின் பெயரால் நான் பொய் சொல்லமாட்டேன்" என்றுஅல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர்: தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி)
நூல்: முஸ்லிம் 4711

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
ஒரு மனிதருக்கு (மறுமையில்) நன்மை செய்ய இறைவன் நாடினால் இவ்வுலகிலேயே அவருக்குரிய தண்டனையை முன்கூட்டியே அளித்து விடுவான். ஒரு மனிதருக்கு (மறுமையில்) அல்லாஹ் தீமையை நாடினால் அவருடைய பாவங்களை நிலுவையில் வைத்து நியாயத் தீர்ப்பு நாளில் கணக்குத் தீர்ப்பான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக்(ரலி)
நூல்: திர்மிதீ 2319

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
இறை நம்பிக்கையுடைய ஆணும் இறை நம்பிக்கையுடைய பெண்ணும் தமது விஷயத்திலும், தமது பிள்ளைகள் விஷயத்திலும், தமது செல்வங்களிலும் தொடர்ந்து துன்பங்களுக்கு உட்படுத்தப்படுவார்கள். அல்லாஹ்வைச் சந்திக்கும் நாளில் அவர்கள் மீது எந்தக் குற்றமும் மீதமிருக்காது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)
நூல்: திர்மிதீ 2323

சென்றவாரத் தொடர்ச்சி...

### கோத்தபாய ஒரு இராணுவ விலங்கு
### – பேராசிரியர் விக்ரர் ஐவன்

இவரைக் கொலை செய்த இராணுவ அதிகாரிகளை விசாரணை செய்து தண்டனை வழங்குமாறு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க கட்டளையிட்டிருந்தார். இந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் உச்ச தண்டனையை வழங்கியது. இது இராணுவத்தினருக்குச் செய்யப்பட்ட துரோகம் அல்ல. இந்தக் கொலை வழக்கின் மூலம் இலங்கை இராணுவத்தினருக்கு ஏற்பட்ட அவப்பெயரைக் களைவதற்கு நீதிமன்றின் இத்தகைய தண்டனை உதவியது.

இலங்கை இராணுவத்தினர் சிவில் நிர்வாகங்களில் தலையீடு செய்வதற்கான கட்டளையை கோத்தபாய வழங்கியதானது மிக மோசமான விளைவாகக் காணப்படுகிறது. சிவில் நிர்வாகங்களால் முகாமை செய்ய வேண்டிய பல்வேறு பதவிகளில் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பொருத்தமான பயிற்சிகள் வழங்கப்படாது இராணுவ அதிகாரிகள் இராஜதந்திரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இராணுவ சார் கற்கைகளை மட்டுமே பூர்த்தி செய்துள்ளனர். இலங்கையின் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடுகள் மேற்கொள்ளப்படுவது மட்டுமன்றி நாட்டின் சிவில் அரசியல் நிறுவக முறைமையும் சீர்குலைக்கப்பட்டுள்ளது. நீதிக்கு அப்பால் குற்றவாளிகளுக்கு மிகக் கொடூரமான தண்டனை வழங்கும் முறைமையை கோத்தா அறிமுகப்படுத்தியுள்ளார். இது அனைத்துலக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட மற்றும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரான ஒரு பாசிச நடவடிக்கையாகக் காணப்படுகிறது.

அரசியல் செயற்பாடுகளில் உத்தியோகபூர்வமாகவும், உத்தியோகபூர்வமற்ற முறையிலும் பாதுகாப்புப் படையினரை ஈடுபடுத்துவதானது கோத்தாவால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய குற்றமாகக் காணப்படுகிறது. போர்க்காலத்தின் போது சில நிறுவனங்கள் போருக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொண்டன. அக்காலப்பகுதியில் இவர்களால் மேற்கொள்ளப்பட்ட பரப்புரையானது போரில் ஈடுபடுவது பிழையானது என்பதை உணர்த்தினாலும் கூட, இந்த அமைப்புக்களை அடக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட நீதிக்கு அப்பாலான வன்முறைசார் கோட்பாடானது இந்தப் பரப்புரை நடவடிக்கைகளைக் குழப்பியது. இப்பரப்புரைகளில் ஈடுபட்ட பலர் படுகொலை செய்யப்பட்டனர். சிலர் காணாமற்போயினர். சில ஊடகங்கள் மீது மிகக் கொடூரமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான சில மோசமான சம்பவங்களில் இராணுவத்துடன் தொடர்புபட்டவர்கள் ஈடுபட்டனர் என்பது வெளிப்படையானது. போர் முடிவடைந்த பின்னரும், இவ்வாறான வன்முறைகள் நிறுத்தப்படவில்லை. பாதுகாப்புப் படைகளுடன் தொடர்புபட்டவர்கள் தொடர்ந்தும் நாட்டில் பல்வேறு வன்முறைச் சம்பவங்களை மேற்கொண்டனர்.

**தீவிரவாதத்திற்கு ஆதரவளித்தல்**

இலங்கையில் தற்போது அதிகம் பேசப்படும் தீவிரவாத பௌத்த அமைப்பான பொது பல சேனாவிற்கு இலங்கையின் பாதுகாப்புச் செயலர் பாதுகாப்பு வழங்குகிறார். இந்த அமைப்பால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளை நிறுத்துவதற்குப்பதிலாக மேலும் மேலும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கு கோத்தபாய ஆதரவு வழங்குகிறார். பொது பல சேனாவின் தலைவரான ஞானசார தேரர் பல்வேறு வன்முறைகளில் ஈடுபடுகின்ற போது நாட்டின் பாதுகாப்புப் படையினர் அதற்கான அனுமதியை வழங்குகின்றனர். இலங்கையின்பாதுகாப்புச்செயலருக்கும், தேரருக்கும் இடையிலான தொடர்பை பாதுகாப்புப் படையினர் அனைவரும் நன்கறிந்துள்ளனர்.

இலங்கையரசாங்க அமைச்சர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேரரால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வன்முறைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இதில் கோத்தபாயவின் ஆதரவு உள்ளது என்பதை உணர்ந்து இவர்கள் அமைதி காக்கின்றனர். இதேபோன்று ஞானசார தேரரின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாத முன்னணி பௌத்த பிக்குகள் கூட தேரருக்கும் பாதுகாப்புச் செயலருக்கும் இடையிலான நெருக்கமான தொடர்பால் அமைதி காக்கின்றனர். **தொடரும்...**

## பிரசங்கி



தாவீதின் குமாரனும் எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கியின் வாக்கியங்கள்.

மாயை மாயை எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்.

சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன?

ஒரு சந்ததி போகிறது. மறு சந்ததி வருகிறது. பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது.

சூரியன் உதிக்கிறது. சூரியன் அஸ்தமிக்கிறது. தான் உதித்த இடத்திற்கே அது திரும்பவும் தீவிரிக்கிறது.

காற்று தெற்கே போய் வடக்கேயுஞ்சுற்றி சுழன்று சுழன்று அடித்து தான் சுற்றின் இடத்துக்கே திரும்பவும் வரும்.

எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது. தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும்.

எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது. அது மனுஷரால் சொல்லிமுடியாது. காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை. கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை.

முன் இருந்ததே இனிமேலும் இருக்கும். முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும். சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை.

இதைப் பார். இது நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுண்டோ? அது நமக்கு முன்னுள்ள பூர்வகாலங்களிலும் இருந்ததே.

முன் இருந்தவைகளை பற்றி ஞாபகம் இல்லை. அப்படியே பின்வரும் காரியங்களைப்பற்றியும் இனிமேலிருப்பவர்களுக்கு ஞாபகம் இராது.

பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருந்தேன்.

வானத்தின்கீழ்நடப்பதையெல்லாம்ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன். மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்குச் தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்.

சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன். இதோ எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

கோணலானதை நேராக்கக்கூடாது. குறைவானதை எண்ணிமுடியாது.


இதோ நான் பெரியவனாயிருந்து எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன். என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன்.

ஞானத்தை அறிகிறதற்கும் பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறதற்கும் நான் என் மனதைப் பிரயோகம் பண்ணினேன். இதுவும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறதென்று கண்டேன்.


அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு. அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன்.

நான் என் உள்ளத்தில் சொல்லிக்கொண்டது என்னவென்றால் வா இப்பொழுது உன்னைச் சந்தோஷத்தினாலே சோதித்துப்பார்ப்பேன். இன்பத்தை அனுபவி என்றேன். இதோ இதுவும் மாயையாயிருந்தது.


நகைப்பைக்குறித்து அது பைத்தியம் என்றும் சந்தோஷத்தைக்குறித்து அது என்ன செய்யும்? என்றும் சொன்னேன்.



# அறிவியல் உலகம்




## நெருக்கடியில் அப்பிள் நிறுவனம்




அப்பிள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுவரும் ஒன்லைன் ஸ்டோரேஜ் சேவையான iCloud இல் காணப்பட்ட பிரபலங்களின் புகைப்படங்கள் ஹெக் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. கடந்த வார இறுதி நாளில் நடிகை Jennifer Lawrence இன் கணக்கில் அவரால் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த சில புகைப்படங்கள் பல்வேறு இணையத்தளங்களில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் ஆராயப்பட்ட போது மேலும் சில பிரபலங்களின் கணக்குகள் ஹெக் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது.


## Apple Spaceship Campus தொடர்பான வீடியோ வெளியீடு



அப்பிள் நிறுவனம் 5 பில்லியன் டொலர்கள் பணத்தை செலவு செய்து பிரம்மாண்ட வளாகம் ஒன்றினை அமைத்து வருகின்றது. GoPro Hero 3+ மற்றும் Phantom 2 Drone கெமராக்கள் மூலம் எடுக்கப்பட்ட இவ்வளாகத்தின் வீடியோக்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

Apple Spaceship Campus என பெயரிடப்பட்டுள்ள இவ்வளாகக் கட்டுமாணப்பணிகள் இவ்வருட ஆரம்பத்தில் தொடங்கப்பட்டது. 2.8 மில்லியன் சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவில் அமைக்கப்படும் இவ்வளாகத்தில் 12,000 பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படவுள்ளதுடன், 2,400 வாகனங்களை நிறுத்தக்கூடிய சுரங்க வாகனத்தரிப்பிடம், 600,000 Research and Development சென்டர்கள் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. மேலும் 2016ம் ஆண்டளவில் கட்டுமாணப்பணிகளை முடிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வளைந்த தொலைக்காட்சிக்கான புதிய Soundbar



பிரபல சம்சுங் நிறுவனம் சில மாதங்களுக்கு முன்னர் வளைந்த மேற்பரப்பைக் கொண்ட தொலைக்காட்சியினை அறிமுகம் செய்திருந்தமை அறிந்த விடயமே. இந்நிலையில் தற்போது அவ்வகையான தொலைக்காட்சிகளுடன் இணைத்து பயன்படுத்தக்கூடிய வகையில் வளைந்த ஒலிப் பட்டியை (Soundbar) அறிமுகம் செய்துள்ளது.

8.1 சனல் உடையதும், இரு ஸ்பீக்கர்களைக் கொண்டதுமான இச்சாதனம் 42 மில்லி மீற்றர்கள் தடிப்புடையதாகவும், 4,200 மில்லி மீற்றர்கள் வளைவாரை உடையதாகவும் காணப்படுகின்றன. இதனை 55 மற்றும் 65 அங்குல அளவுடைய தொலைக்காட்சிகளில் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பூக்கள் தரும் ஆரோக்கியம்



சில பூக்கள் மனிதனுக்கு ஆரோக்கியமான மருத்துவ குணங்களை அள்ளித்தருகிறது. செம்பருத்திப் பூ பொதுவாக தாது விருத்திக்கு நல்லது. செம்பருத்திப் பூவைச் சேகரித்து அதன் மத்தியில் உள்ள காம்புகள் மற்றும் இதழ்களை மட்டும் எடுத்து வெய்யிலில் காயவைக்க வேண்டும்.

நன்றாக காய்ந்தபின் சுத்தப்படுத்தி அரைத்து தூளாக்கி விடவேண்டும் இந்தத் தூளை வேளைக்கு ஒரு தேக்கரண்டி எடுத்து பசும்பாலில் இட்டுக் காய்ச்சி இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் தாது புஷ்டி ஏற்படும், உடல் கட்டு உண்டாகும். தேகத்தில் மினுமினுப்பு உண்டாகும், செம்பருத்தி பூவின் இதழ்களை மட்டும் கஷாயம் செய்து இரண்டு நாளைக்கு ஒரு வேளை இரண்டு அவுன்ஸ் சாப்பிட்டு வந்தால் இதயம் தொடர்பான நோய்கள் நீங்கும்.

வாழைப்பூவின் மருத்துவ குணங்கள் சீதபேதிக்கும், இரத்த மூலத்துக்கும் வாழைப் பூ மிகவும் நல்லது. வாய்ப்புண் மற்றும் வயிற்று புண்களுக்கும் இது சிறந்த இயற்கை மருந்தாக பயன்படுகிறது. மேலே குறிப்பிட்ட நோய்களுக்கு வாழைப் பூவை அன்றாட வாழ்வில் சேர்த்துக் கொண்டால் பயன் அடையலாம்.

வேப்பம் பூவின் மருத்துவ குணங்கள் பல. வேப்பம் பூ பித்தம் தொடர்பான எல்லா விதமான பிணிகளையும் முற்றிலும் குணமாக்கும் வல்லமை கொண்டது. வேப்பம் பூவையும், நில வேம்பையும் சேர்த்து கஷாயம் வைத்து சாப்பிட அஜீரணக் கோளாறுகள் நீங்கி நல்ல பசியெடுக்கும். கொஞ்சம் வேப்பம் பூவுடன் இரண்டு அல்லது மூன்று மிளகை வைத்து அரைத்து சுண்டைக்காய் அளவு குழந்தைகளுக்கு கொடுத்தால் வயிற்றுக் கிருமிகள் செத்து மலத்தோடு வந்துவிடும்.

கிராமப் புறங்களில் குழந்தையின் வயிற்றில் உள்ள பூச்சிகளை கொள்வதற்கு வேப்பம் கொழுந்தை மைப்போல் அரைத்து அதில் நீர்கலந்து ஒரு அவுண்ஸ் அளவு கொடுப்பது வழக்கம். பெரியவர்கள் அதிகாலையில் வேப்பங் கொழுந்தை சிறிது பறித்து சாப்பிட்டு வர வயிறு சம்மந்தமான பிரச்சினைகளை ஒழிக்கலாம். இது ஒரு சிறந்த கிருமி நாசினியாக பயன்படுகிறது.

## ஐபோன்களுக்கு நிகராக புதிய அறிமுகம்



ஸ்மார்ட் கைப்பேசி உலகில் அப்பிள் நிறுவனத்திற்கு போட்டியாக விளங்கும் Samsung நிறுவனம் Galaxy Alpha எனும் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்துள்ளது. iPhone களில் சாயலில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கைப்பேசியானது 4.7 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், 1.8GHz மற்றும் 1.3GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய இரு Processor, பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியவற்றினைக் கொண்டுள்ளது.

மேலும் Android 4.4.4 KitKat இயங்கு தளத்தினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட இக்கைப்பேசியானது 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா, 2.1 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா, 32GB சேமிப்பு நினைவகம் ஆகியனவற்றினையும் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பலவீனமான திசுக்களை கண்டறிய புதிய முறை அறிமுகம்




முன்னர் ஏற்பட்ட காயங்களினால் பலவீனமான நிலையை அடைந்துள்ள உடல் இழையங்களைக் கண்டறிவதற்கு புதிய படிமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்படிமுறையினை வோசிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

Direct Deformation Estimation (DDE) என அழைக்கப்படும் இப்படிமுறையானது முன்னர் காணப்பட்ட முறையிலும் 1000 மடங்கு துல்லியம் வாய்ந்து இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் பிளாஸ்டிக் நார் ஒன்றினை இழுப்பதன் மூலம் பலவீனமான பகுதிகளில் நீர்த்தன்மையான பதார்த்தம் வடிய ஆரம்பிப்பதைக் கொண்டு பலவீனமான இழையங்கள் கண்டறியப்படுகின்றது.

## Asus அறிமுகம் செய்யும் புத்தம் புதிய டேப்லட்



Asus நிறுவனமானது MeMo Pad 7 எனும் 1.83GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Quad Core Intel Atom z3560 64-bit Processor இனை உள்ளடக்கிய புத்தம் புதிய டேப்லட்டினை அறிமுகம் செய்துள்ளது. இந்த டேப்லட் ஆனது பிரதான நினைவகமாக 2GB RAM மற்றும் 16GB அல்லது 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது.

இவற்றுடன் 7 அங்குல அளவு, 1920 x 1200 Pixel Resolution உடைய HD தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், Android 4.4 KitKat இயங்குதளம், 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா என்பவற்றினையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீங்கள் ஹை ஹீல்ஸ் அணியும் பெண்களா?



இக்கால கட்டத்தில் ஹை ஹீல்ஸ் ரொம்பவே பெஷனாகி விட்டது. இதனால் கம்பீரமான தோற்றம் மட்டுமின்றி தங்களுக்கு நம்பிக்கையும், தைரியமும் கிடைப்பதாக பெண்கள் பலரும் கூறுவதுண்டு. ஆனால் உண்மையில் இதற்குள் பல்வேறு ஆபத்துக்கள் கொட்டிக் கிடக்கின்றது. நீண்ட காலத்துக்கு ஹை ஹீல்ஸ் அணிவதால் சுளுக்கு, கால் ஆணிகள், கொப்புளங்கள் தவிர குதிகாலின் பின் பகுதி பெரிதாகி துருத்திக் கொண்டு சிவப்பாகவோ அல்லது வீங்கியோ இருக்கலாம்.

எலும்புகளில் கல்சியம் அளவு குறைந்து, விரிசல்கள், முறிவுகள் ஏற்படலாம். நரம்புகளை கிள்ளும் உணர்வால் அதிகபட்ச வலி ஏற்படலாம். காலை உயர்த்திய நிலையில் வைத்திருப்பது குறுகிய கால தசை நார் வலியை உருவாக்கலாம், இதனால் தட்டையாக காலணிகளை அணிய முடியாமல் போகலாம். ஹை ஹீல்க்குள் காலைத் திணிப்பதால் ஒரு நாளில் பாதம் சுமார் 455 கிலோ சக்தியை உள்வாங்குகிறது. பாதத்திலிருந்து அதிகப்படி இரத்தம் வெளியேறி, வீக்கம் உருவாகிறது. இந்த வீக்கத்தை குறைக்க ஒரு நிமிடத்துக்கு ஒரு முறை குளிர்ந்த நீரையும், சுடுதண்ணீரையும் மாற்றி மாற்றி ஊற்றவும்.

கடைசியாக குளிர்ந்த நீர் ஊற்றி காய வைத்து மொய்ஸ்ரைஸ் செய்யவும். சில பயிற்சிகளையும் செய்தால் கால்வலியில் இருந்து மீளலாம். காலில் வலி, வீக்கம் அதிகமானால் காலணிகளை கழற்றிவிட்டு அமருங்கள். சிறிய பந்தின் மீது காலை வைத்து உருட்ட வேண்டும், அடுத்த காலுக்கு மாற்றி அதையே செய்யவும். கோலிக்குண்டுகளை தரையில் சிதறச் செய்து கால் விரல்களால் ஒவ்வொன்றாக ஒற்றியெடுக்கவும். கால்விரல்களை கீழ் நோக்கி நீட்டவும், இதை தலா 6 முறை செய்தால் நல்லது.

அதே போல் ஹீல்ஸ் அணிந்து படிகளில் ஏறும் போது பாதத்தின் முன் பகுதியும் குதிகாலும் ஒரே நேரத்தில் நன்றாக வைக்கப்படுவதை உறுதிப்படுத்தவும், படிகளில் இறங்கும் போது பாதத்தில் முன்பகுதி முதலில் வைக்கப்பட வேண்டும்.

# விளையாட்டு உலகம்

## வோஸ்னியாக்கியிடம் விழி பிதுங்கி வெளியேறிய ஷரபோவா



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் உலகின் முன்னணி வீராங்கனையான மரியா ஷரபோவா நான்காவது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார்.

பத்தாம் நிலை வீராங்கனையான வோஸ்னியாக்கி (டென்மார்க்) 6–4, 2–6, 6–2 என்ற கணக்கில் ஷரபோவாவை வீழ்த்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றார். வோஸ்னியாக்கி கால் இறுதியில் 13ம்நிலை வீராங்கனை சாரா இரானியை (இத்தாலி) சந்திக்கிறார். அவர் நான்காவது சுற்றில் 6–3, 2–6, 6–0 என்ற கணக்கில் பரோனியை (குரோஷியா) தோற்கடித்தார்.

## இங்கிலாந்து ஹட்ரிக் தோல்வியினால் குக் விலகல்



இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரில் இங்கிலாந்து அணி 'ஹட்ரிக்' தோல்வியை தழுவியதால் அணித்தலைவர் குக் மிகுந்த நெருக்கடியில் உள்ளார். ஏற்கனவே குக் அணித்தலைவர் பதவிக்கு சரிவரமாட்டார். இவரது தலைமையில் இங்கிலாந்து அணி உலகக்கிண்ணப் போட்டிகளை சந்திக்க முடியாது என முன்னாள் வீரர்கள் விமர்சனங்களை எழுப்பினர்.

இந்நிலையில் இங்கிலாந்து அணியின் தொடர் தோல்வியால் குக் மிகுந்த மனவேதனையில் இருக்கிறார். மேலும் ஹட்ரிக் தோல்வியால் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகமாட்டேன் என்றும் கூறியுள்ளார். அவர் கூறுகையில், தற்போதைய நிலையில் நான் அணித்தலைவர்பதவியில்இருந்துவிலகும் திட்டம் எதுவுமில்லை. உலகக்கிண்ணம் வரை என்னை அணித்தலைவராக அனுமதிக்கலாம். 03 ஆண்டுகளுக்கு மேலாக அணித்தலைவராக இருக்கும் எனக்கு உலகக்கிண்ணத்தை வெல்வதே லட்சியமாகஉள்ளதுஎன்றுதிட்டவட்டமாக கூறியுள்ளார்.


## ஜேர்மனிக்கு புதிய அணித்தலைவர்



ஜேர்மனி கால்பந்து அணியின் அணித்தலைவராக இருந்த பிலிப் லாம் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து புதிய அணித்தலைவராக ஸ்கீவன்ஸ்டீகர் அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த ஜூலையில் பிரேசிலில் நடந்த உலகக்கிண்ண கால்பந்து தொடரில் ஜேர்மனி அணி கிண்ணம் வென்று அசத்தியது. இதன்பின் ஜேர்மனி அணித்தலைவர் பிலிப் லாம் சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெற்றார்.

தற்போது இப்பதவிக்கு ஸ்கீவன்ஸ்டீகர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உலகக்கிண்ணம் வென்ற அணியில் இடம்பெற்றிருந்த இவர் ஆர்ஜென்டீனாவுக்கு எதிரான இறுதிப்போட்டியில் காயமடைந்ததால் வெளியேறினார். இதுவரை அணிக்காக 108 போட்டியில் பங்கேற்றுள்ள இவர் 23 கோல்கள் அடித்துள்ளார். அதே போல் கிளப் அணிகள் பேயர்ன் முனிச் அணி சார்பில் விளையாடி வருகிறார்.

## பிரேசில் அணிக்கு புதிய தலைவர் தெரிவு



பிரேசில் கால்பந்து அணியில் வரலாற்றிலேயே குறைந்த வயதுள்ள அணித்தலைவராக நட்சத்திர வீரர் நெய்மர் பொறுப்பேற்றுள்ளார். சமீபத்தில் நடந்து முடிந்த உலகக்கிண்ண கால்பந்து தொடரில் பிரேசிலுக்கு சில்வா அணித்தலைவராககவும், பயிற்சியாளராக லூயிஸ் பெலிப் ஸ்கோலரியும் பதவி வகித்தனர். பின்னர் அரையிறுதியில் அடைந்த படுதோல்வியை தொடர்ந்து பயிற்சியாளர் மாற்றப்பட்டு துங்கா அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அணியின் புதிய அணித்தலைவராக22வயதேயானநெய்மர் நியமிக்கப்பட்டுள்ளார். பயிற்சியாளர் துங்காவின் சிபாரிசை ஏற்று அந்த நாட்டு கால்பந்து சங்கம் இம்முடிவை எடுத்துள்ளது. கொலம்பியாவுக்கு எதிராக நடைபெற உள்ள போட்டியில் நெய்மர் தலைமையில் பிரேசில் களமிறங்குகிறது. இதுகுறித்து துங்கா கூறுகையில் அணித்தலைவர் என்பவர் பிற வீரர்களுக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும்.

அந்த வகையில் நெய்மரின் உத்வேகம் அணி முழுமையையும் தொற்றிக்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறேன். அருமையான வீரர்களை அணித்தலைவராக கொண்டிருந்த பிரேசில் உலகக்கிண்ணத்தை வென்று காண்பித்துள்ளது. எனவே 2018ம் ஆண்டு உலகக்கிண்ணத்தை நெய்மர் தலைமையில் வெல்லும் என்று கூறியுள்ளார்.

## சானியா ஜோடி சம்பியன்



நியூயோர்க்கில் யு.எஸ்.ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா, பிரேசிலின் புருனோ சோரஸ் ஜோடி அமெரிக்காவின் அபிகைல் ஸ்பியர்ஸ், மெக்சிகோவின் சான்டியாகோ கான்சலேஸ் ஜோடியை சந்தித்தது.

முதல் செட்டை 6–1 எனக் கைப்பற்றிய இந்திய–ஸ்பெயின் ஜோடி, 2வது செட்டை 2–6 என இழந்தது. பின் எழுச்சி கண்ட சானியா ஜோடி சூப்பர் டை பிரேக்கர் சுற்றில் 11–9 என வென்றது. முடிவில் சானியா புருனோ ஜோடி வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

## அசாருதீனின் சாதனையை முறியடித்த டோனி



இந்திய அணியின் அணித்தலைவர் டோனி அதிக ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெற்ற அணித்தலைவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி தற்போது இங்கிலாந்துடன் ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இந்த தொடரில் தொடர்ச்சியாக இந்திய அணி 2 வெற்றிகள் பெற்றிருந்தது. இந்நிலையில் நடைபெற்ற 4வது ஒரு நாள் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணியின் அணித்தலைவர் பொறுப்பில் உள்ள டோனி அதிக ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெற்றவர் என்ற பெருமையை பெற்று சாதனை படைத்தார். இதற்கு முன் இந்தசாதனை முன்னாள் அணித்தலைவர் அசாருதின் வசம் இருந்தது.

1990 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டுவரை அணித்தலைவர்பொறுப்பில் இருந்த அசாருதின் 174 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 90 ஒருநாள் போட்டிகளை வென்றிருந்தார். ஆனால் தற்போதைய அணித்தலைவர் டோனி 162 போட்டிகளில் அணித்தலைவராக பொறுப்பு வகித்து 91வது வெற்றியை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## விருது வென்ற சங்கக்கார, மெத்யூஸ்



2014 ஆம் ஆண்டுக்கான டயலொக் கிரிக்கெட் விருதினை இலங்கை அணி யின் அணித்தலைவர் மெத்யூஸ் மற்றும் சங்கக்கார கைப்பற்றினர். இந்த ஆண்டுக்கான டயலொக் கிரிக்கெட் விருதுகள் பத்தரமுல்லவில் உள்ள ஒரு ஹொட்டலில் நடைபெற்றது. இதில் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் விருது டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அணித்தலைவராக உள்ள மெத்யூஸ்க்கு கொடுக்கப்பட்டது.

அதே போல் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அசத்தி வரும் சங்கக்காரவுக்கு மக்கள் விருப்ப வீரருக்கான விருதும், நிரோஷன் டிக்வெலக்கு வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர் விருதும் வழங்கப்பட்டது. இந்த விருதினை இலங்கையின் விளையாட்டு துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே வழங்கினார்.

## சுனில் நரேனின் உலக சாதனை



கரீபியன் பிரிமியர் லீக் டி 20 கிரிக்கெட் போட்டிகளில் மேற்கிந்திய வீரர் சுனில் நரேன் உலக சாதனை படைத்தார். சமீபத்தில் மேற்கிந்திய தீவுகளில் கரீபியன் பிரீமியர் லீக் நடந்தது. இதில் ஐந்தாவது போட்டியில் கயானா அமேசன் வாரியஸ் மற்றும் ரெட் ஸ்டீல் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ரெட் ஸ்டீல் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 118 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் களமிறங்கிய கயானா அமேசன் வாரியஸ் அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 118 ஓட்டங்கள் எடுக்க போட்டி சமனானது.

இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியானது ' சமநிலையில் முடிவுற்றதால் சூப்பர் ஓவர் முறைக்குத் தள்ளப்பட்டது. சூப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய கயானா அமேசன் வாரியஸ் நிர்ணயிக்கப்பட்ட ஒரு ஓவரில் 11 ஓட்டங்கள் எடுத்தது. பதிலுக்கு ஒரு ஓவரில் 12 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய ரெட் ஸ்டீல் அணியினருக்கு இப்படி ஒரு சோகமான முடிவு கிட்டும் என யாரும் நினைத்து இருக்க மாட்டார்கள்.

கயானா அமேசன் வாரியஸ் அணியின் சார்பாக பந்துவீச அழைக்கப்பட்டவர் சுழல் மன்னன் சுனில் நரேன். ரெட் ஸ்டீல் அணியின் பூரான் துடுப்பெடுத்தாட நரேன் பந்து வீசினார்.முதல் பந்தை அடிக்க முயன்ற பூரான் அந்த பந்தை கோட்டை விட அது கீப்பரிடம் சென்றது. அதே போல் 3 பந்துகள் நழுவ, மட்டையில் பட்டு பாய்ந்த 4வது பந்து பவுண்டரியை நோக்கி செல்ல அது கேட்ச் ஆனது. இதனையடுத்து நகங்கடித்த ரசிகர்கள் உற்சாகத்தில் குதிக்க, மீதமுள்ள 1 பந்தையும் சில உத்திகளை பயன்படுத்தி துடுப்பாட்டக்காரர் தொடா தவாறு வீசினார் சுனில். இதன் மூலம் ஒரு ஓட்டங்கள் கூட விட்டுக்கொடுக்காமல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தி உலக சாதனை படைத்தார். இப்படி ஒரு சாதனை நிகழ்த்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

## அவுஸ்திரேலியாவுடன் மோத தயாராகும் தென்னாபிரிக்கா



முத்தரப்பு ஒருநாள் போட்டியில் தென் ஆபிரிக்க அணி சிம்பாவேயை 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிப்போட்டியில் நுழைந்தது. முதலில் விளையாடிய தென்னாபிரிக்கா அணி 6 விக்கெட் இழப்பிற்கு 271 ஓட்டங்கள் குவித்தது. டுமினி 51 ஓட்டங்களும், பாப் டு பிளிஸ்சிஸ் 121 ஓட்டங்களும் சேர்த்தனர்.

இந்த தொடரில் பிளிஸ்சிஸ் பதிவு செய்த 3வது சதம் இதுவாகும். இரண்டு அணிகளுக்கு மேல் பங்கேற்ற ஒரு தொடரில் தென்னாபிரிக்க வீரர் ஒருவர் மூன்று சதங்கள் விளாசுவது இதுவே முதல் முறையாகும். இதனையடுத்து 25.1 ஓவருக்குள் இலக்கை எட்டினால் மட்டுமே இறுதிப்போட்டிக்கு தகுதி பெற முடியும் என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாவே 47.2 ஓவர்களில் 208 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதிகபட்சமாக பிரண்டன் டெய்லர் 79 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. 4 ஆட்டத்தில் விளையாடி ஒன்றில் மட்டும் வெற்றி பெற்ற திருப்தியுடன் சிம்பாவே நடையை கட்டியது. இதனையடுத்து வரும் 6ம் திகதி நடக்கும் இறுதிப்போட்டியில் தென்னாபிரிக்கா அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன.

# உலகச் செய்திகள்

## தேனிலவிற்காக தீவையே விலைக்கு வாங்கிய தம்பதியினர்



ஹொலிவூட்டின் புதுமண தம்பதியினரான பிராட் பிட்- ஏஞ்சலினா ஜூலி தங்களது தேனிலவை கொண்டாட தீவு ஒன்றை விலைக்கு வாங்கியுள்ளனர். கடந்த மாதம் இரகசியமாய் திருமணம் செய்து கொண்ட பிராட் பிட்- ஏஞ்சலினா ஜூலி, தற்போது தங்களது தேனிலவை மால்டா (Malta) தீவில் கொண்டாட திட்டமிட்டுள்ளனர்.

தனிமையில் இருக்க அவர்கள் விரும்பியதால் அந்த தீவில் உள்ள அனைவரையும் வெளியேற்ற மொத்தமாக ரூ.1 கோடியே 20 லட்சத்து 26 ஆயிரத்து 188 கொடுத்துள்ளனர். மேலும் பணத்தை பெற்றுக் கொண்டு தீவை விட்டு வெளியேற பலரும் சம்மதம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மூன்றாம் கட்ட உலக போரை முன்னெடுக்கும் ரஷ்யா



பல்லாயிரக்கணக்கான உயிர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் பாரிய போரொன்றை ரஷ்யா முன்னெடுத்து வருவதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார். இரண்டாம் உலகப் போரிற்கு பின்னர் சர்வதேசம் காணாத பாரிய போரே தற்போது நடைபெற்றுவருவதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் வெலரி ஹெலிட்டி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த நாகரீக உலகத்தில் ஒரு பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறான கருத்தினை வெளியி டுவது ஜீரணிக்க முடியாத செயல் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரஷ்யாவின் மத்தியஸ்த்தத்தில் உக்ரைன் மற்றும் கிளர்ச்சியாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை எவ்வித தீர்வு எட்டப்படாத நிலையில் நிறைவடைந்துள்ளது.

## மீண்டும் ஒரு அமெரிக்க பத்திரிகையாளரின் தலைதுண்டிப்பு




அமெரிக்காவை சேர்ந்த மற்றொரு பத்திரிகையாளரின் தலையை துண்டித்த காணொளியை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிர வாதிகள் வெளியிட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 19ம் திகதி அமெரிக்க பத்திரிகையாளரான ஜேம்ஸ் போலே (James Foley) தலையை துண்டித்து கொலை செய்து வெளியிட்ட காணொளியில் அடுத்ததாக மற்றொரு அமெரிக்க பத்திரிகையாளரான ஸ்டீவன் சாட்லா.ஃ.பை (Steven Sotloff age-31) கொலை செய்யப் போவதாக தெரிவித்திருந்தனர்.

அதேபோல் தற்போது ஸ்டீவன் சாட்லா.ஃ.ப் என்ற பத்திரிகையாளரை கொலை செய்த காணொளியை வெளியிட்டுள்ளனர். அந்த காணொளியில் மண்டியிட்டு இருந்த ஸ்டீவன் கூறுகையில், ஒபாமா உங்களின் வெளியுறவுக் கொள்கை மூலம் ஈராக் விஷயத்தில் தலையிடுவது அமெரிக்க மக்களின் உயிரை காக்க வேண்டும்.

ஆனால் உங்கள் தலையீட்டுக்கு நான் ஏன் என் உயிரை பறிகொடுக்க வேண்டும்? நான் அமெரிக்க குடிமகன் இல்லையா? என்று கேட்டுள்ளார். ஸ்டீவன் அருகில் நின்றிருந்த ஜோன் என்ற தீவிரவாதி அங்கிலத்தில் கூறிய தாவது, நான் வந்துவிட்டேன் ஒபாமா.

உங்களின் கொடூரமான வெளியுறவுக் கொள்கை, தொடர்ந்து தாக்குதல் நடத்துவது, எச்சரிக்கையையும் தாண்டி தாக்குவது ஆகியவற்றால் தான் நான் திரும்பி வந்தேன் என்று கூறிவிட்டு ஸ்டீவனின் தலையை துண்டித்துள்ளார். மேலும் இதே தீவிரவாதி தான் ஜேம்ஸ் போலேயின் தலையையும் துண்டித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் கிழக்கு பிராந்தியத்தில் நிரந்தர போர் நிறுத்தம்



உக்ரைனின் கிழக்கு பிராந்தியத்தில் கிளர்ச்சியாளர்களுடன் நிரந்தர போர் நிறுத்தத்தை ஏற்படுத்த உக்ரைன் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதியுடன் மேற்கொண்ட தொலைபேசி கலந்துரையாடலின் போது இந்த இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ பேர்சென்கோ குறிப்பிட்டுள்ளார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுப்பது தொடர்பில் இரண்டு நாட்டுத் தலைவர்களும் பரஸ்பர புரிந்துணர்வை எட்டியுள்ளனர்.

இதேவேளை, ரஷ்யா-உக்ரைன் ஆகிய நாடுகளுக்கு இடையிலான நெருக்கடிகள் பற்றி எஸ்தோனியா, லத்வியா, லித்துவேனியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்களுடன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பேச்சுவார்தை நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் பின்னணியில் உக்ரைனின் கிழக்கு பிராந்தியத்தில் நிரந்தர யுத்த நிறுத்தம் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

எஸ்தோனியா, லத்வியா, லித்துவேனியா ஆகிய நாடுகள் சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளாகும். இந்த நாடுகள் 2004ஆம் ஆண்டு நேட்டோவில் இணைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் ஏவுகணை சோதனை - வடகொரியா



பிராந்திய நாடுகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வடகொரியா மற்றுமொரு ஏவுகணையை பரிசோதித்துள்ளது. குறுந்தூர ஏவுகணை ஒன்றே இவ்வாறு பரிசோதிக்கப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது. , வடகொரியாவின் கிழக்கு கடற்பகுதியில் குறித்த குறுந்தூர ஏவுகணை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 60 கிலோ மீற்றர் தூரத்துக்கு சென்று தாக்கக்கூடிய வகையில் குறித்த ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனைக்கு தென்கொரியா கடும் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளது. மேலும் வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனையை நிறுத்தவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுப்பாட்டை இழந்ததால் நொறுங்கிய லொறி



ஜேர்மனியில் லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்ததால் பாதை மாறி சென்று விபத்துக்குள்ளாகியுள்ளது. ஜேர்மனியின் லிச்டென்பெர்க் (Lichtenberg) நகரில் உள்ள A44 நெடுஞ்சாலையில் 20,000 கிலோ விலங்குகளுக்கான உணவு பொருட்களை ஏற்றி வந்த லொறியை ஓட்டி வந்த இயின் (Ein, age-40) என்ற ஓட்டுநர் திடீரென கட்டுப்பாட்டை இழந்துள்ளார்.

இதனால் எதிர்பாராதவிதமாக பாதைக்கு வெளியே சென்ற அந்த லொறி விபத்திற்குள்ளானதில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இந்த விபத்து அதிகாலை வேளையில் நடந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். மேலும் இச்சம்பவத்தால் நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## மலேசிய ஏர்லைன்ஸை திட்டித் தீர்த்த மக்கள்




மலேசிய ஏர்லைன்ஸ் நிறுவனம் வைத்த ஓன்லைன் போட்டி குறித்து மக்கள் திட்டியதால் தற்போது போட்டியின் பெயரை மாற்றியுள்ளது. கடந்த மார்ச் 8ம் திகதி கோலாலம்பூரில் இருந்து பீஜிங் சென்ற MH 370 விமானம் நடுவானில் மாயமாகி இன்று வரை தகவல் அறியப்படாத நிலையில் உள்ளது.

இதனை தொடர்ந்து கடந்த யூலை மாதம் 17ம் திகதி போயிங் 777 விமானம் உக்ரைனில் எல்லையில் ரஷ்ய கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டதால் அதிலிருந்த 298 பேர் பலியாகியுள்ளனர். இந்த சம்பவங்களால் மலேசியன் ஏர்லைன்ஸின் வியாபாரம் பாதிக்கப்பட்டதால், தனது வியாபாரத்தை பெருக்க மலேசியன் ஏர்லைன்ஸ் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தைச் சேர்ந்தவர்களுக்காக பக்கெட் லிஸ்ட் போட்டியை ஓன்லைனில் அறிவித்திருந்தது.

மேலும் இந்த போட்டியில் வெற்றி பெறும் 16 பேருக்கு ஐபேட் அல்லது மலேசியாவுக்கு திரும்பி வரும் டிக்கெட் அளிக்கப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தது. இதை பார்த்த பலர் இப்படியா கொஞ்சம் கூட பொறுப்பில்லாமல் தலைப்பு வைப்பது என கண்டனம் தெரிவித்துள்ளனர் இதனையடுத்து பக்கெட் லிஸ்ட் போட்டி லிங்க் என்ற தலைப்பை நீக்கிய அந்நிறுவனம், நீங்கள் செய்ய விரும்பும் பட்டியலை தெரிவியுங்கள் என கூறியுள்ளது.

## மனித குலத்தை அழிக்க வரும் விண்கல்



விண்கற்களால் மனித இனம் அழிந்து போகும் அபாயம் உள்ளதாக இங்கிலாந்து நாட்டின் இயற்பியல் பேராசிரியர் பிரையன் கொக்ஸ் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, கடந்த சில மாதங்களுக்கு முன்பு 2014 ஈ.சி. என பெயரிடப்பட்டுள்ள விண்கல் கடந்த மார்ச் மாதத்தில் 38,300 மைல்கள் தொலைவில் நெருங்கி வந்து பூமியை கடந்து சென்றுள்ளது. பூமிக்கு, இந்த ஒரு விண்கல் மட்டுமல்லாமல் அதிக தீங்கு விளைவிக்கும் 1,400 விண்கற்கள் அச்சுறுத்தலாய் இருப்பதாக நாசா கண்டறிந்துள்ளது.

இந்நிலையில் எப்போது வேண்டுமானாலும் விண்கல் தாக்கலாம் என்பதால் நம்மால் என்ன செய்ய முடியும் என்பது குறித்து நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்றும் இதுவே தற்போது அனைவருக்கும் மிகப்பெரிய கவலையாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# விந்தை உலகம்

## பிறந்த 3 நாளில் போத்தலில் தானாக பால் குடிக்கும் பச்சிளங் குழந்தை....

பிரித்தானியாவில் குழந்தை ஒன்று பிறந்த உடன் யாரின் உதவியின்றியும் போத்தல் மூலம் பால் குடிப்பது மருத்துவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

பிரித்தானியாவை சேர்ந்த ஓனி(Onyi Chiedozie- Age 20)என்ற பெண் சில வாரங்களுக்கு முன்பு அமரா என்ற அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்துள்ளார்.

இந்த குழந்தை பிறந்த மூன்று நாட்களிலேயே போத்தலில் பால் குடிக்க கற்றுக் கொண்டுள்ளது.

அமராவின் கைகளில் போத்தல் கொடுத்தால் போதும், தனது தாயின் கைகளை தட்டிவிட்டு தானாகவே போத்தலை கைகளில் பிடித்து கொண்டு பால் குடிக்கிறது. இதனை கண்ட மருத்துவர்களும், செவிலியர்களும் ஆச்சரியத்தில் உறைந்துள்ளனர்.

இதுகுறித்து அமராவின் தாயார் கூறுகையில், தான் இதை கண்டதும் அதிர்ச்சியடைந்ததாகவும், இதனால் இதனை தினமும் படம் பிடித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.





## பிளாஸ்டிக் பேக்கில் கூட ஐரோப்பியரின் நகைச்சுவையைப் பார்த்தீர்களா?...




## என்ன கொடுமை சார் இது?... போங்கடா நீங்களும் உங்க கல்யாணமும்....

இந்தியாவின் கிழக்கு பகுதியை சேர்ந்த மங்கிலி (18) என்ற பெண்ணுக்கு கெட்ட தோசங்கள் இருப்பதால், திருமணம் செய்து கொண்டால் அவரின் கணவருக்கு அழிவு என்றும் குடும்பத்தில் குழப்பம் நடக்கும் எனவும் ஜாதகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தோசத்தை கழிப்பதற்கு அப்பெண்ணின் குடும்பத்தார் நாயை திருமணம் செய்துவைத்துள்ளனர்.



## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படங்கள்














இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 14.09.2014 அன்று வெளியிடப்பட்டது.